# 163 மதனி முத்துக்கள்

இந்த சிறுநூல் ஷேகே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத், தஃவதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத், அல்லாமா, மௌலானா **முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரZஸவி** دَامَتْ بَرَکَاتُہُمُ الْعَالِیَہ அவர்களால் உருது மொழியில் எழுதப்பட்டதாகும். மொழி பெயர்ப்பு மஜ்லிஸ் தமிழ்மொழியில் மொழி பெயர்த்துள்ளது. இதன் மொழி பெயர்ப்பிலோ அல்லது அச்சுக்கோவையிலோ ஏதாவது தவறுகள் தென்பட்டால் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள மொழிபெயர்ப்பு மஜ்லிஸோடு தொடர்பு கொண்டு நற்கூலியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**குறிப்பு :–** இதில் வரும் ஷரீஆ சட்டங்கள் யாவும் ஹனஃபி மத்ஹபின் படியே எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**Majlis-e-Tarajim (Dawat-e-Islami)**

Aalami Madani Markaz, Faizan-e-Madinah, Mahallah Saudagran, Purani Sabzi Mandi, Bab-ul-Madinah, Karachi, Pakistan

**UAN:** ☎ +92-21-111-25-26-92 – Ext. 1262

**Email:** 🖃 translation@dawateislami.net

# 163 மதனி முத்துக்கள்

“163 மதனி முத்துக்கள்” என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு

◆

ALL RIGHTS RESERVED

Copyright © 2016 Maktaba-tul-Madinah

இவ்வெளியீட்டின் எப்பகுதியும் மக்தBபதுல் மதீனாவின் சட்டரீதியான முன் அனுமதியின்றி மின்னியல், இயந்திரவியல் ரீதியான எக்கருவிகளாலும் மீளப்பதிப்பித்தல், ஒளிப்பரப்பு செய்தல், போட்டோ பிரதி எடுத்தல், ஒளிப் பதிவு செய்தல் அல்லது வேறு முறைகளில் பதிவுசெய்தல் கூடாது.

**ஆரம்ப வெளியீடு:** Jummadal-Ukhra, 1437 (April 2016)

**வெளியீட்டாளர்:** மக்தBபதுல் மதீனா

**Quantity:** -

**ISBN:** -

**அனுசரணை:**

உங்களின் மரணித்த குடும்ப அங்கத்தவருக்காக ஒரு நூலையோ அல்லது ஒரு சிறுநூலையோ அச்சிட்டு ஈஸாலே ஸவாBபுக்காக அனுசரணை செய்ய விரும்பினால் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

## Maktaba-tul-Madinah

Aalami Madani Markaz, Faizan-e-Madinah Mahallah Saudagran,
Purani Sabzi Mandi, Bab-ul-Madinah, Karachi, Pakistan

**Email:**maktabaglobal@dawateislami.net– maktaba@dawateislami.net

**Phone:** +92-21-34921389-93 – 34126999

**Web:** www.dawateislami.net

اَلْحَمْدُ لِلّٰہِ رَبِّ الْعٰلَمِیْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰی سَیِّدِ الْمُرْسَلِیْنَ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰہِ مِنَ الشَّیْطٰنِ الرَّجِیْمِ ؕ بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ؕ

## புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ

இஸ்லாமிய புத்தகங்களையோ அல்லது பாடங்களையோ வாசிக்கும்போது பின்வரும் துஆவை ஓதிக்கொள்ளவும். اِنْ شَآءَاللّٰہ عَزَّوَجَلَّ வாசிப்பவைகள் ஞாபகத்தில் இருக்கும்.

اَللّٰهُمَّ افْتَحْ عَلَيْنَا حِكْمَتَكَ وَانْشُرْ
عَلَيْنَا رَحْمَتَكَ يَا ذَا الْجَلَالِ وَالْاِكْرَام

யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! அறிவு ஞானத்தின் வாயிலை நமக்காக திறந்து விடுவாயாக. மேலும் நமக்கு ரஹ்மத்துடைய கதவுகளை திறந்து விடுவாயாக கண்ணியமும், உயர்வும் உடையவனே!

(அல்முஸ்தத்ரஃப், பாகம் 1, பக்கம் 40, தாருல் ஃபிக்ர் பேரூத்)

(ஆரம்பத்திலும், கடைசியிலும் ஒரு தடவை ஸலவாத் ஓதிக்கொள்ளவும்)


www.dawateislami.net

# பொருளடக்கம்


புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ ....................................... iii

## 163 மதனி முத்துக்கள் ....................................1

ஸலவாத்தின் சிறப்பு ..................................................................... 1

யாரஸூலே“கருணை காட்டுங்கள்” என்பதிலுள்ள 13 எழுத்துகளின் தொடர்பில் தண்ணீர் குடிப்பதற்கான 13 மதனி முத்துக்கள் ........................................................................3

“மதீனாவை நோக்கிச்செல்லும் பயணி” என்பதிலுள்ள 15 எழுத்துகளின் தொடர்பில் நடப்பதற்கான 15 சுன்னாக்களும், ஒழுக்கங்களும் ...........................................................................8

இமாமெ“அஃலம் ஆபூஹனீபாவின் அந்தஸ்து” என்பதிலுள்ள 19 எழுத்துகளின் தொடர்பில் எண்ணெய் தடவுதல், தலை சீவுதல் பற்றிய 19 மதனி முத்துக்கள் ......... 15

“Zசுல்ஃப் வைப்பது பரிசுத்த நபியின் சுன்னாவாகும்” என்பதிலுள்ள 22 எழுத்துகளின் தொடர்பில் Zசுல்ஃப் மற்றும் தலை முடிகள் போன்றவற்றின் 22 மதனி முத்துக்கள் .........25

“மதனி ஆடையை கடைபிடியுங்கள் ”என்பதிலுள்ள 14 எழுத்துகளின் தொடர்பில் ஆடையை பற்றிய 14 மதனி முத்துக்கள்.......................................................................33

மதனி தோற்றம் .......................................................................39




www.dawateislami.net

‘‘தலைப்பாகை அணிவது அண்ணலின் முபாரகான சுன்னாவாகும்’’ என்பதிலுள்ள 25 எழுத்துகளின் தொடர்பில் தலைப்பாகையின் 25 மதனி முத்துக்கள் ................................ 41

‘‘மோதிரத்தின் அத்தியாவசிய சட்டங்கள்’’ என்பதிலுள்ள 19 எழுத்துகளின் தொடர்பில் மோதிரத்தின் 19 மதனி முத்துக்கள்.................................................................50

‘‘மிஸ்வாக் செய்வது முபாரகான சுன்னத்தாகும்’’ என்பதிலுள்ள இருபது எழுத்துகளின் தொடர்பில் மிஸ்வாகின் 20 மதனி முத்துக்கள் ........................................56

கப்ருகளைத்‘‘தரிசிப்பது சுன்னத் ’’என்பதிலுள்ள 16 எழுத்துகளின் தொடர்பில் கப்ரிஸ்தானுக்கு சமூகமளிப்பதன் 16 மதனி முத்துக்கள் .....................................................63



www.dawateislami.net

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ؕ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ؕ

# 163 மதனி முத்துக்கள்

ஷைத்தான் எவ்வளவுதான் சோம்பலை உண்டாக்கினாலும் இச்சிறுநூலை இறுதிவரை படியுங்கள். اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ அதிக மான சுன்னத்துக்களை கற்றுக்கொள்ள முடியும்.

## ஸலவாத்தின் சிறப்பு

மதீனத்துப் பேரரசர், உள்ளத்திற்கு அமைதியூட்டுபவர், நறுமண வியர்வை கொண்டவர்களான நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அறிவித்துள்ளார்கள். மனிதர்களே! நிச்சய மாக கியாம நாளன்று அதன் அச்சம் மற்றும் கேள்வி கணக்கிலிருந்தும் அவசரமாக விடுதலை பெறுபவர் யாரென்றால், உங்களில் யார் உலகத்தில் என் மீது அதிகமாக ஸலவாத் கூறினார்களோ அவர்களாவார்கள்.

(அல்பிர்தௌஸ் Bபிமஃஸூரில் கத்தாப், பாகம் 5, பக்கம் 277, ஹதீஸ் 8175)

صَلُّوْا عَلَى الْحَبِيْب   صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد



www.dawateislami.net

பலவிதமான தலைப்புக்களில் மதனி முத்துக்களை ஏற்றுக் கொள்ளுங்கள். வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு மதனி முத்துக்களும் ஈருலகப்பேரரசர், பெருமானார் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் சுன்னத்துக்கள் என்று நினைத்து விட வேண்டாம். மாறாக, இதிலே சுன்னத்துக்கள் மட்டுமின்றி மார்க்க அறிஞர்களான முன்னோர்களின் رَحِمَهُمُ اللّٰهُ تَعَالٰى மூலம் அறிவிக்கப்பட்ட மதனி முத்துக்களும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்தை ஞாபகம் வையுங்கள், அதாவது எந்தவொரு செயல்பாட்டையும் சுன்னாதான் என்று உறுதியாக அறிந்து கொள்ளப்படும் வரை சுன்னத் என்று பிரகடனப்படுத்த முடியாது.

இந்நூலிலுள்ள அனைத்து மதனி முத்துக்களும் ஒவ்வொரு முஸ்லிம்களுக்கும் பொதுவானதாகவும், அதன்படி அமல் செய்வது சுவனத்தை பெற நம்பிக்கை ஊட்டுவதாகவும் உள்ளது. முபல்லிஹீன் மற்றும் முபல்லிஹாமார்களிடம் வேண்டிக்கொள்வது என்னவென்றால், சுன்னத்துக்கள் நிறைந்த தமது பயானின் இறுதியில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இந்நூலிலுள்ள ஏதாவதொரு தலைப்பில் மதனி முத்துக்களை பயான் செய்யுங்கள். ஒவ்வொரு தலைப்புக்கு முன்னும் பின்னும் வழங்கப்பட்டிருக்கும் பந்தியை வாசித்து காட்டுங்கள்.

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே, பயானை முடிக்கின்ற இந்நேரத்தில் சுன்னத்துக்களின் சிறப்புக்களை யும் மேலும் சில சுன்னத்துக்களையும், ஒழுக்கங்களையும்



www.dawateislami.net

பயான் செய்யும் பாக்கியத்தை பெறுகிறேன். அகிலத்தின் அதிபதி அண்ணல் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: "யார் என் சுன்னாவை நேசிக்கின்றாரோ அவர் என்னை நேசிக்கின்றார், யார் என்னை நேசிக்கின் றாரோ அவர் சுவனத்தில் என்னோடு இருப்பார்."

(இப்னி அசாகிர், பாகம் 7, பக்கம் 343)

எஜமானாரே! எனதுள்ளம் உங்கள்
சுன்னா வாழும் இல்லமாகட்டும்

சுவனத்தில் அயல்வீட்டாளனாக
தாங்கள் எனை ஆக்க வேண்டும்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## "யாரஸூலே கருணை காட்டுங்கள்" என்பதிலுள்ள 13 எழுத்துகளின் தொடர்பில் தண்ணீர் குடிப்பதற்கான 13 மதனி முத்துக்கள்

அண்ணல் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் இரண்டு அமுதவாக்குகள்:

- ஒட்டகத்தைப்போன்று ஒரே மூச்சில் தண்ணீர் குடிக்காதீர்கள். மாறாக இரண்டு அல்லது மூன்று முறை (மூச்செடுத்து) குடியுங்கள். மேலும் குடிப்பதற்கு



www.dawateislami.net

முன் بِسۡمِ اللہ வையும், குடித்து முடிந்ததும் اَلۡحَمۡدُ لِلّٰہ என்றும் கூறுங்கள். (திர்மிதி, பாகம் 3, பக்கம் 352, ஹதீஸ் 1892)

- பாத்திரத்தில் மூச்சு விடுவது அல்லது ஊதுவதை விட்டும் நபி பெருமானார் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيۡهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் தடை செய்துள்ளார்கள். (அபூதாவூத், பாகம் 3, பக்கம் 474, ஹதீஸ் 3728) புகழ்பெற்ற விரிவுரையாளர், ஹகீமுல் உம்மத், ஹழ்ரத் முஃப்தி அஹ்மத் யார்கான் عَلَيۡهِ رَحۡمَةُ الۡحَنَّان அவர்கள் இந்த பரிசுத்த ஹதீஸின் அடிப்படையில் கூறுகிறார்கள். பாத்திரத்தில் மூச்சு விடுவது மிருகங்களின் செயலாகும். அதேபோல் மூச்சு சிலசமயம் விசமாகி விடும். அதனால் பாத்திரத்தி லிருந்து முகத்தை அகற்றி மூச்சு விடுங்கள். (அதாவது மூச்சு விடும்போது கிளாஸை முகத்தை விட்டும் அகற்றுங்கள்) சூடான பால் அல்லது தேனீரை ஊதி ஆற்ற வேண்டாம். மாறாக சற்று தாமதித்து போதுமான அளவு சூடு குறைந்ததும் குடியுங்கள். (மிர்ஆத், பாகம் 6, பக்கம் 77) ஆனால் ஸலவாத் போன்றவற்றை ஒதி நோய் நிவாரண நிய்யத்துடன் ஊதுவதில் தவறில்லை.

- குடிப்பதற்கு முன் بِسۡمِ اللہ வை கூறிக்கொள்ளுங்கள்.

- சிறுசிறு மிடறாக உறிஞ்சி பருகுங்கள். பெரிய பெரிய மிடறாக குடிப்பதால் கல்லீரல் நோய் ஏற்படுகிறது.



www.dawateislami.net

- தண்ணீரை 3 மூச்சில் குடியுங்கள்.
- உட்கார்ந்து வலது கையால் தண்ணீரை குடியுங்கள்.
- குவளை போன்றவற்றால் வுழு செய்து, அதில் மிஞ்சிய தண்ணீரை குடிப்பது 70 நோய்களுக்கு நிவாரணி யாகும். ஏனெனில் இது ஸம்ஸம் தண்ணீருக்கு ஒப்பாகிறது. இந்த இரண்டையும் (அதாவது வுழுவில் மிஞ்சிய தண்ணீரும், ஸம்ஸம் தண்ணீரும்) தவிர வேறு எந்த தண்ணீரையும் நின்று குடிப்பது மக்ரூஹ் ஆகும். (மஅஹூத் அZஸ்: ஃபதாவா ரZஸவிய்யா, பாகம் 4, பக்கம் 575, பாகம் 21, பக்கம் 669) இந்த இரண்டு தண்ணீரையும் கிப்லாவை முன்னோக்கி எழுந்து நின்று குடியுங்கள்.
- குடிக்கக்கூடிய பானத்தில் விளைவுகள் போன்றவற்றை ஏற்படுத்தக்கூடிய எதுவும் இருக்கின்றதா என்று குடிப்பதற்கு முன் பாருங்கள். (இத்திஹாஃபுஸ் ஸாத லிஸ் Zசுபைதி, பாகம் 5, பக்கம் 594)
- குடித்து முடிந்ததும் اَلْحَمْدُ لِلّٰهِ என்று கூறுங்கள்.
- ஹுஜ்ஜதுல் இஸ்லாம் ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் முஹம்மத் பின் முஹம்மத் பின் முஹம்மத் கZஸ்ஸாலி عَلَيْهِ رَحْمَةُ اللّٰهِ الْوَالِي அவர்கள் கூறுகிறார்கள். بِسْمِ اللّٰهِ கூறி குடிக்க ஆரம்பியுங்கள், முதலாவது மூச்சின் இறுதியில்



www.dawateislami.net

اَلْحَمْدُ لِلّٰهِ என்றும், இரண்டாவதற்கு பின் اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ என்றும், மூன்றாவது மூச்சுக்குப் பின் اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ الرَّحْمٰنِ الرَّحِيْمِ என்றும் கூறுங்கள். (இஹ்யாஉல் உலூம், பாகம் 2, பக்கம் 8)

- ஒரு முஸ்லிம் அருந்திய சுத்தமான தண்ணீர் கிளாஸில் மீதமிருந்து, அது பாவனைக்கு தகுதி வாய்ந்ததாகவும் இருக்கும்போது வீணாக வீசக்கூடாது.

- அறிவிக்கப்பட்டுள்ளது. سُؤْرُ الْمُؤْمِنِ شِفَاءٌ முஸ்லிமுடைய உமிழ்நீர் நிவாரணமாகும். (அல் ஃபதாவல் ஃபிக்ஹிய்யதுல் குப்ரா லிப்னி ஹஜரில் ஹைதமி, பாகம் 4, பக்கம் 117 – கஷ்ஃபுல் ஹிஃபா, பாகம் 1, பக்கம் 384)

- குடித்த சில நிமிடங்களின் பின் காலியான கிளாஸை பார்க்கும்போது அதன் ஓரத்திலிருந்து வடியும் சில துளிகள் அடியில் சேர்ந்திருக்கும், அதையும் குடியுங்கள்.

ஆயிரக்கணக்கான சுன்னாக்களை கற்பதற்கு மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட இரு நூற்களான “பஹாரெ ஷரீஅத்” 16ஆம் பாகம் (312 பக்கங்கள்) இன்னும் 120 பக்கங்கள் அடங்கிய “சுன்னதே ஔர் ஆDதாப்” ஆகிய நூற்களை வாங்கிப்படியுங்கள். தஃவதே இஸ்லாமியின் மதனி காஃபிலாக்களில் நாயகத்தின் ஆஷிகீன்களுடன்


www.dawateislami.net

பயணித்தலும் சுன்னாக்களின் பயிற்சிக்கான சிறந்ததொரு வழியாகும்.

கருணையை அடைவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்
சுன்னாக்களை கற்பதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

கஷ்டங்கள் தீர்ந்துவிடும் காஃபிலாவில் பயணியுங்கள்
கெடுதிகள் நீங்குவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே, பயானை முடிக்கின்ற இந்நேரத்தில் சுன்னத்துக்களின் சிறப்புக்களையும் மேலும் சில சுன்னத்துக்களையும், ஒழுக்கங்களையும் பயான் செய்யும் பாக்கியத்தை பெறுகிறேன். அகிலத்தின் அதிபதி அண்ணல் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: “யார் என் சுன்னாவை நேசிக்கின்றாரோ அவர் என்னை நேசிக்கின்றார், யார் என்னை நேசிக்கின்றாரோ அவர் சுவனத்தில் என்னோடு இருப்பார்.”

(இப்னி அசாகிர், பாகம் 7, பக்கம் 343)

எஜமானாரே! எனதுள்ளம் உங்கள்
சுன்னா வாழும் இல்லமாகட்டும்



www.dawateislami.net

சுவனத்தில் அயல்வீட்டாளனாக
தாங்கள் எனை ஆக்க வேண்டும்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## "மதீனாவை நோக்கிச்செல்லும் பயணி" என்பதிலுள்ள 15 எழுத்துகளின் தொடர்பில் நடப்பதற்கான 15 சுன்னாக்களும், ஒழுக்கங்களும்

- 15ஆம் ஜுஸ்உ, சூரா பனீஇஸ்ராஈலின் 37ஆவது திருவசனத்தில் இறைவன் கூறுகிறான்,

وَلَا تَمْشِ فِي الْاَرْضِ مَرَحًا ۚ

اِنَّكَ لَنْ تَخْرِقَ الْاَرْضَ وَلَنْ تَبْلُغَ الْجِبَالَ طُوْلًا ﴿٣٧﴾

தர்ஜுமா கன்Zஸுல் ஈமான்: மேலும் பூமியில் கர்வமாக நடக்க வேண்டாம். நிச்சயமாக பூமியை பிளந்து விடவே மாட்டீர். இன்னும் உயரத்தால் மலைகளை அடைந்து விடவே மாட்டீர்.

- தஃவதே இஸ்லாமியின் வெளியீட்டு நிறுவனமான மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட 1197 பக்கங்கள் அடங்கிய "பஹாரெ ஷரீஅத்" பாகம் 3,



www.dawateislami.net

பக்கம் 435 இல் நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் பொன்மொழி அறிவிக்கப்பட்டுள்ளது: ஒரு மனிதன் இரண்டு போர்வையை போர்த்திக் கொண்டு கர்வமாக சென்றுக்கொண்டிருந்தான். மேலும் ஆணவத்தில் இருந்தான். அவன் பூமியிலே மூழ்கடிக்கப்பட்டான். மேலும் கியாமநாள் வரை அவன் பூமிக்குள் மூழ்கிக்கொண்டிருப்பான். (ஸஹீஹ் முஸ்லிம், பக்கம் 1156, ஹதீஸ் 2088)

❋ நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் நடக்கும்போது சிலசமயம் தனது நபித்தோழர் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ ஒருவரின் கரத்தை தன் முபாரக்கான கரத்தினால் பிடித்துக்கொள்வார்கள். (அல்முஃஜமுல் கபீர், பாகம் 7, பக்கம் 277, ஹதீஸ் 7132)

❋ நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் ஓர் உயரமான இடத்திலிருந்து இறங்குவது போல், சற்றே முன்னே சரிந்த வண்ணம் நடப்பார்கள். (அஷ்ஷமாஇலுல் முஹம்மதிய்யா லித் திர்மிதி, பக்கம் 87, இலக்கம் 118)

❋ தங்கம் அல்லது வேறு உலோகங்களின் சங்கிலிகளை கழுத்தில் அணிந்துக்கொண்டு, மனிதர்களுக்கு காண்பிப்பதற்காக முன் பொத்தான்களை திறந்துக் கொண்டு பெருமையாக ஒருபோதும் நடக்காதீர்கள். இது புத்தியில்லாத பெருமை பிடித்த வரம்பு மீறியவர்க



www.dawateislami.net

ளின் நடைமுறையாகும். கழுத்தில் தங்கச் சங்கிலி அல்லது காப்பு (BRACELET) அணிவது ஆண்களுக்கு ஹராமாகும். மேலும் ஏனைய உலோகங்களாலான சங்கிலிகளை அணிவதற்கும் அனுமதியில்லை.

- தடையேதும் இல்லாத பட்சத்தில் பாதையின் ஓரமாக, நடுத்தரமான நிலையில் நடந்து செல்லுங்கள். இவ்வளவு அவசரமாக இவர் எங்கே போகிறார் என்று மக்கள் பார்க்கும் அளவு மிக வேகமும் வேண்டாம். பார்ப்பவர்கள் நீங்கள் நோயாளி என நினைக்கும் அளவு மெதுவாகவும் நடக்காதீர்கள். அம்ரத் (தாடி, மீசை இல்லாத கவர்ச்சியான இளம் வாலிபர்) உடைய கையை பிடிக்க வேண்டாம். பாலுணர்வோடு ஓர் இஸ்லாமிய சகோதரரின் கையைப் பிடித்தல், அவரோடு முஸாஃபஹா செய்தல் அல்லது அவரை அனைத்துக்கொள்ளல் போன்ற செயல்கள் ஹராமும், நரகத்திற்கு இட்டுச்செல்லக்கூடிய செயலுமாகும்.

- பாதையில் நடக்கும்போது (தேவையின்றி) அங்குமிங்கும் பார்ப்பது சுன்னத்தல்ல. பார்வையை தாழ்த்திக் கொண்டு கௌரவத்தோடு நடக்க வேண்டும். ஹழ்ரத் ஸய்யிதுனா ஹஸ்ஸான் பின் அBபீ சினான் عَلَيهِ رَحمَةُالحَنّان அவர்கள் பெருநாள் தொழுகைக்காக சென்றார்கள். வீட்டுக்கு திரும்பியதும் அவர்களுடைய மனைவி இன்று எத்தனை பெண்களை பார்த்தீர்கள்? என்று கேட்டதற்கு, அவர்கள் رَحمَةُ اللهِ تَعَالٰی عَلَيه மௌனமாக



www.dawateislami.net

இருந்தார்கள். மனைவி மிகவும் வற்புறுத்தியபோது, “நான் வீட்டிலிருந்து வெளியேறி, உங்களிடம் திரும்பி வரும்வரை என் காலின் பெருவிரல்களையே பார்த்துக் கொண்டிருந்தேன் எனக்கூறினார்கள்.” (கிதாபுல் வரஃ மஅ மவ்ஸூஆ இமாம் இப்னு அBபித்துன்யா, பாகம் 1, பக்கம் 205)

سُبْحٰنَ اللّٰه அல்லாஹ்வின் நல்லடியார்கள் பாதையில் செல்லும்போது, குறிப்பாக மக்கள் அதிகமாக இருக்கும் இடத்தில், மார்க்கம் அனுமதிக்காத யாரையாவது பார்க்க நேரிடுமோ என்பதற்காக தேவையில்லாமல் அங்குமிங்கும் பார்க்க மாட்டார்கள். இது அந்த மகானின் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه இறையச்சமாகும். மார்க்க சட்டம் என்னவென்றால், ஒரு பெண்ணின் மீது திடீரென பார்வைப்பட்டு, அந்தப்பார்வையை உடனே திருப்பி விட்டால் பாவியல்ல.

- மற்றவர்களின் மாடி முகப்பு (BALCONEY) அல்லது ஜன்னல்களின் பக்கம் தேவையில்லாமல் பார்ப்பது பொருத்தமற்ற செயலாகும்.

- நடக்கும் போதும், படிகளில் ஏறி இறங்கும் போதும் காலணிகளின் சத்தம் வராமல் பாதுகாத்துக்கொள்ளுங்கள். நமது இன்னுயிர் முஸ்தஃபா صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் காலணிகளின் சத்தத்தை விரும்பவில்லை.


www.dawateislami.net

- ❋ இரண்டு பெண்கள் நின்றுக்கொண்டு அல்லது வழியில் நடந்துக் கொண்டிருக்கும்போது அவர்களுக்கிடையே செல்லாதீர்கள். பரிசுத்த ஹதீஸில் அது தடுக்கப்பட் டுள்ளது. (அபூதாவூத், பாகம் 4, பக்கம் 470, ஹதீஸ் 5273)

- ❋ பாதையில் நடக்கும்போது, நிற்கும்போது அல்லது அமர்ந்திருக்கும்போது மக்களுக்கு முன்னால் துப்புவது, மூக்கை சுத்தப்படுத்துவது, மூக்கினுள் விரலைப்போடுவது, காதுகளை குடைவது, உடம்பில் உள்ள அழுக்கை விரல்களால் சுத்தப்படுத்துவது, அந்தரங்க உருப்பை சொறிவது இதுபோன்றவைகள் ஒழுக்கக்கேடான செயல்களாகும்.

- ❋ சிலருக்கு வழியில் எதைக்கண்டாலும் உதைக்கும் பழக்கமுள்ளது. இது மிகவும் அநாகரிகமான பழக்க மாகும். இதனால் பாதம் பழுதாகும் அச்சமும் உள்ளது. அதேபோல் பத்திரிகைகள் அல்லது ஏதாவது எழுதப்பட்டிருக்கும் டப்பாக்கள், பாக்கெட்டுக்கள் மேலும் மினரல் வோட்டரின் காலியான போத்தல்கள் போன்றவற்றை உதைப்பதும் ஒழுக்கக்கேடான செயலா கும்.

- ❋ நடக்கும்போது ஷரீஅத்திற்கு மாற்றமில்லாத சட்டங் களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். உதாரணமாக, வாகனங்கள் செல்லும்போது பாதையை கடப்பதற்காக



www.dawateislami.net

“பாதசாரி கடவைகள்” அல்லது “மேம்பாலத்தை” பயன்படுத்த வேண்டும்.

❋ வாகனம் வரும் திசையை பார்த்து விட்டு பாதையை கடக்க வேண்டும். நீங்கள் பாதையின் நடுவில் இருக்கும்போது வாகனம் வந்தால் ஓடிச்செல்வதை விட சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அதே இடத்தில் நிற்பதில்தான் சிறந்த பாதுகாப்புண்டு. அதேபோல் ரயில் வண்டிகள் செல்லும் நேரங்களில் ரயில் பாதைகளை கடக்க முயல்வது மரணத்தை வரவேற்பது போன்றதாகும். ரயில் தூரத்தில்தானே வருகிறது என நினைத்து கடக்க முயற்சி செய்பவர்கள், அவசரம் அல்லது கவனமின்றி கம்பி போன்றவற்றில் கால்கள் சிக்கி, கீழே விழுந்து ரயில் அவர்கள் மேல் சென்று விடும் ஆபத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். அதேபோல் ரயில் பாதைகளை கடப்பது சட்ட விரோதமான இடங்களும் உண்டு. குறிப்பாக புகையிரத நிலையங்களில் இச்சட்டங்களை பேணி நடக்க வேண்டும்.

❋ இபாதத் மீது சக்தியை பெற்றுக்கொள்வதற்கான நல்லெண்ணத்துடன் முடியுமானால் திக்ரோடு, ஸலவாத்தோடு தினமும் 45 நிமிடங்கள் நடவுங்கள். اِنْ شَآءَاللّٰہ عَزَّوَجَلَّ உடல் நலம் நன்றாக இருக்கும். நடையின் சிறந்த முறை இதுவாகும், அதாவது முதல்



www.dawateislami.net

15 நிமிடம் வேகமாக எட்டை வைத்தும், அடுத்த 15 நிமிடம் நடுத்தரமாக எட்டை வைத்தும், கடைசி 15 நிமிடம் மீண்டும் வேகமாக எட்டை வைத்தும் நடவுங்கள். இவ்வாறு நடப்பதால் முழு உடலும் பயிற்சி பெறுகிறது. اِنْ شَآءَاللّٰہ عَزَّوَجَلَّ செமிபாட்டுத்தொகுதி சீராக இருக்கும். GAS, மலச்சிக்கல், கொழுத்தல், இருதய நோய்கள் மேலும் ஏனைய நோய்களிலிருந்தும் اِنْ شَآءَاللّٰہ عَزَّوَجَلَّ பாதுகாப்பு கிடைக்கும்.

ஆயிரக்கணக்கான சுன்னாக்களை கற்பதற்கு மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட இரு நூற்களான "பஹாரெ ஷரீஅத்" 16ஆம் பாகம் (312 பக்கங்கள்) இன்னும் 120 பக்கங்கள் அடங்கிய "சுன்னதே ஓர் ஆDதாப்" ஆகிய நூற்களை வாங்கிப்படியுங்கள். தஃவதே இஸ்லாமியின் மதனி காஃபிலாக்களில் நாயகத்தின் ஆஷிகீன்களுடன் பயணித்தலும் சுன்னாக்களின் பயிற்சிக்கான சிறந்ததொரு வழியாகும்.

கருணையை அடைவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்
சுன்னாக்களை கற்பதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

கஷ்டங்கள் தீர்ந்துவிடும் காஃபிலாவில் பயணியுங்கள்
கெடுதிகள் நீங்குவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

صَلُّوْا عَلَی الْحَبِیْب　　صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلٰی مُحَمَّد


www.dawateislami.net

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே, பயானை முடிக்கின்ற இந்நேரத்தில் சுன்னத்துக்களின் சிறப்புக்களையும் மேலும் சில சுன்னத்துக்களையும், ஒழுக்கங்களையும் பயான் செய்யும் பாக்கியத்தை பெறுகிறேன். அகிலத்தின் அதிபதி அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: “யார் என் சுன்னாவை நேசிக்கின்றாரோ அவர் என்னை நேசிக்கின்றார், யார் என்னை நேசிக்கின்றாரோ அவர் சுவனத்தில் என்னோடு இருப்பார்.”

(இப்னி அசாகிர், பாகம் 7, பக்கம் 343)

எஜமானாரே! எனதுள்ளம் உங்கள்
சுன்னா வாழும் இல்லமாகட்டும்

சுவனத்தில் அயல்வீட்டாளனாக
தாங்கள் எனை ஆக்க வேண்டும்

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## “இமாமெ அஃலம் ஆபூஹனீபாவின் அந்தஸ்து” என்பதிலுள்ள 19 எழுத்துகளின் தொடர்பில் எண்ணெய் தடவுதல், தலை சீவுதல் பற்றிய 19 மதனி முத்துக்கள்

❋ ஹழ்ரத் ஸய்யிதுனா அனஸ் رَضِیَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் அன்பர், மறைமுக ஞானத்தை அறிந்தவர், குறைகளற்ற


www.dawateislami.net

தூயவர், பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் தலையில் அதிகமாக எண்ணெய் தடவுபவர்களாகவும், முபாரகான தாடியை சீப்பால் சீவுபவர்களாகவும் இருந்தார்கள். மேலும் பரகத்தான தலையில் ஸர்பந்த் (தலைப்பாகைக்கு கீழ் அணியும் கைக்குட்டை போன்றது) வைப்பார்கள், எதுவரையென்றால் அது எண்ணெயால் நனைந்து விடும். (அஷ்ஷமாஇலுல் முஹம்மதிய்யாஹ் லித்திர்மிதி, பக்கம் 40, ஹதீஸ் 32) ஸர்ப்பந் பாவிப்பது சுன்னத் என்பது தெரிய வருகிறது. இஸ்லாமிய சகோதரர்கள் எப்பொழுது தலையில் எண்ணெய் தடவினாலும், ஒரு சிறிய துணியை தலையில் கட்டிக்கொள்ளுங்கள். அதனால் اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ தொப்பியும், தலைப்பாகையும் எண் ணெயின் அழுக்குகளிலிருந்து மிகவும் பாதுகாப்பாக இருக்கும். اَلْحَمْدُ لِلّٰه عَزَّوَجَلَّ ஸGகே மதீனா عُفِيَ عَنهُ அவர்களுக்கு வருடக்கணக்காக, சுன்னத்தின் நிய்யத்துடன் ஸர்ப்பந் பாவிக்கும் பழக்கமுள்ளது.

❋ முஸ்தஃபா صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அமுத வாக்கு: 'யாருக்கு முடி உள்ளதோ அவர் அதை சங்கை படுத்தட்டும்.' (அபூதாவூத், பாகம் 4, பக்கம் 103, ஹதீஸ் 4163) அதாவது அவைகளை கழுவி, எண்ணெய் தடவி, சீவிக்கொள்ளுங்கள். (அஷிஃஅதுல் லம்ஆத், பாகம் 3, பக்கம் 617) தலை மற்றும் தாடியின் முடிகளை சவர்க் காரம் போன்றவற்றால் கழுவும் பழக்கம் யாருக்கு இல்லையோ அவர்களின் முடிகளில் அதிகமாக நாற்றம்


www.dawateislami.net

வீசும். தனக்கு நாற்றம் வராவிட்டாலும் பிறருக்கு நாற்றம் வீசும். வாய், முடிகள், உடல் இன்னும் ஆடை போன்றவற்றில் நாற்றம் வந்தால், அந்நிலையில் மஸ்ஜிதுக்குள் நுழைவது ஹராமாகும். ஏனெனில் அதனால் மனிதர்களுக்கும், மலக்குமார்களுக்கும் இடையூறு ஏற்படுகிறது. ஆம், நாற்றம் இருக்கிறது ஆனால் அது மறைந்திருந்தால் அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. உதாரணமாக, கக்கத்தின் நாற்றம்.

❋ ஹழ்ரத் ஸய்யிதுனா நாஃபிஹ் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنۡہُ அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹழ்ரத் ஸய்யிதுனா இப்னு உமர் رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنۡہُمَا அவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு முறை எண்ணெய் தடவுவார்கள். (முஸன்னஃப் இப்னு அபீஷைபா, பாகம் 6, பக்கம் 117) தலை முடியில் அதிகமாக எண்ணெய் தடவுவது விஷேசமாக கல்விமான்களுக்கு பிரயோஜனமளிக்கும். அதனால் தலையில் வரட்சி ஏற்படாது. இன்னும் மூளை செழிப்பாகுவதுடன் ஞாபகசக்தி வலுவடையும்.

❋ முஸ்தஃபா صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلَیۡہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்களின் அமுத வாக்கு: “உங்களில் யாராவது எண்ணெய் தடவுவதாக இருந்தால் கண் புருவத்திலிருந்து ஆரம்பியுங்கள். அதனால் தலைவலி தூரமாகும்.” (அல்ஜாமிஉஸ் ஸஙீர், பக்கம் 28, ஹதீஸ் 369)



www.dawateislami.net

❈ “கன்Zஸுல் உம்மா”லில் உள்ளது. நபிகள் நாயகம் صَلَّى اللّٰہ تَعَالٰی عَلَیۡهِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் எண்ணெய் தடவும் போது, முதலாவது தமது இடது உள்ளங்கையில் எண்ணெயை போட்டு, பின்பு முதலில் இரு கண் புருவங்களிலும் பின்னர் இரு கண்களிலும் அதன்பின் பரிசுத்த தலையிலும் தடவுவார்கள். (கன்Zஸுல் உம்மால், பாகம் 7, பக்கம் 46, இலக்கம் 18295)

❈ “தபரானி”யில் அறிவிக்கப்பட்டுள்ளது. மதீனத்துப் பேரரசர் மாநபி صَلَّى اللّٰہ تَعَالٰی عَلَیۡهِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் முபாரக்கான தாடியில் எண்ணெய் தடவும்போது “عَنۡفَقَہ” (அதாவது கீழ் உதடுக்கும், நாடிக்கும் இடையே உள்ள முடிகள்) வில் இருந்து ஆரம்பிப்பார்கள். (அல்முஃஜமுல் அவ்ஸத், பாகம் 5, பக்கம் 366, ஹதீஸ் 7629)

❈ தாடியை சீப்பால் சீவுவது சுன்னத்தாகும். (அஷிஃஅதுல் லம்ஆத், பாகம் 3, பக்கம் 616)

❈ بِسۡمِ اللّٰہ கூறாமல் எண்ணெய் தடவுவதும், முடிகளை பரட்டையாக வைப்பதும் சுன்னத்துக்கு மாற்றமாகும்.

❈ பரிசுத்த ஹதீஸில் உள்ளது. யார் بِسۡمِ اللّٰہ கூறாமல் எண்ணெய் தடவுகிறானோ அவனுடன் 70 ஷைத்தான் கள் சேர்கின்றன. (அமலுல் யவ்மி வல்லைலதி லிப்னிஸ் சுன்னி, பக்கம் 327, ஹதீஸ் 173)



www.dawateislami.net

❋ ஹழ்ரத் ஸய்யிதுனா அபூஹுரைரா رَضِیَ اللّٰہ تَعَالٰی عَنۡہُ அவர்கள் கூறியதாக, ஹுஜ்ஜதுல் இஸ்லாம் ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் முஹம்மத் பின் முஹம்மத் பின் முஹம்மத் Gகஸ்ஸாலி عَلَیۡہِ رَحۡمَۃُ اللّٰہِ الۡوَالِی அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒரு தடவை முஃமினுடைய ஷைத்தானும் காபிருடைய ஷைத்தானும் சந்தித்துக் கொண்டன. காபிருடைய ஷைத்தான் நன்றாக கொழுத்து செழிப்பாக நல்ல ஆடையுடன் இருந்தான். முஃமினுடைய ஷைத்தான் பலகீனமாக, பரட்டையான முடியுடன் ஆடையில்லாமல் இருந்தான். அப்போது காபிருடைய ஷைத்தான் முஃமினுடைய ஷைத்தானிடம், நீ ஏன் இவ்வளவு பலகீனமாக இருக்கிறாய்? என்று கேட்டதற்கு, நான் சேர்ந்திருப்பவர் உண்ணும்போதும், பருகும்போதும் بِسۡمِ اللّٰہ ஷரீபை ஓதுவார், அப்போது நான் பசியிலும் தாகத்திலும் இருப்பேன். எண்ணெய் தடவும்போதும் بِسۡمِ اللّٰہ ஷரீபை ஓதுவார், அதனால் என்னுடைய தலைமுடி பரட்டையாக இருக்கிறது எனக்கூறினான். அப்போது காபிருடைய ஷைத்தான், நான் சேர்ந்திருப்பவர் இந்த வேலைகளில் எதுவும் செய்ய மாட்டான், அதனால் நானும் அவனுடன் உண்ணுதல், பருகுதல், ஆடை அணிதல் இன்னும் எண்ணெய் தடவுவதிலும் கலந்துக்கொள்வேன் எனக்கூறினான். (இஹ்யாஉல் உலூம், பாகம் 3, பக்கம் 45)



www.dawateislami.net

- எண்ணெய் தடவு முன் بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ என்று ஓதி இடது உள்ளங்கையில் கொஞ்சம் எண்ணெயை போட்டுக்கொள்ளுங்கள். பின்பு முதலாவதாக வலது கண் புருவத்திலும் பின்னர் இடதிலும் அதன்பின் வலது கண் இமையிலும் பின்பு இடதிலும் தடவுங்கள். இப்போது தலையில் எண்ணெயை தடவுங்கள். மேலும் தாடியில் எண்ணெய் தடவும்போது கீழ் உதடுக்கும், நாடிக்கும் இடையே உள்ள முடிகளிலிருந்து ஆரம்பியுங்கள்.

- சர்சோங்கா தேல் எனும் எண்ணெயை தடவுபவர் தொப்பியை அல்லது தலைப்பாகையை கழற்றும்போது சிலசமயம் துர்நாற்றம் வீசும். ஆகையால் இயலுமான வர்கள் நல்ல மணமுள்ள, உயர்தர எண்ணெயை தலையில் தடவவும். மணமுள்ள எண்ணெய் செய்வதற்கு ஓர் இலேசான வழிமுறை இதுவாகும், அதாவது தேங்காய் எண்ணெய் போத்தலில் உங்கள் விருப்பத்துக்குரிய அத்தர் சில துளிகளை சேர்த்து, கழக்கவும். மணமான எண்ணெய் தயாராகி விடும். தலை மற்றும் தாடி முடிகளை அடிக்கடி சவர்க்காரத் தால் கழுவிக்கொள்ளவும்.

- பெண்கள் தலையை சீவும்போது அல்லது கழுவும் போது பிரியும் முடிகளை அந்நியவர் (அதாவது எப்போதும் திருமணம் முடிக்க ஹராமாகாதவர்) களின்


www.dawateislami.net

பார்வை படாமல் மறைத்து வைப்பது அவசியமாகும். (பஹாரெ ஷரீஅத், பாகம் 3, பக்கம் 449)

❈ அகிலத்தின் அதிபதி, அண்ணல் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் தினமும் தலை சீவுவதை தடுத்துள்ளார்கள். (திர்மிதி, பாகம் 3, பக்கம் 293, ஹதீஸ் 1462) இந்த தடுத்தல் மக்ரூஹ் தன்Zஸீஹி ஆகும். அதாவது, நோக்கம் என்னவென்றால், ஆண்கள் அலங்காரம் செய்வதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கக்கூடாது என்பதாகும். (பஹாரெ ஷரீஅத், பாகம் 3, பக்கம் 592) இமாம் மனாவி عَلَيْهِ رَحْمَةُ اللهِ الْقَوِى அவர்கள் கூறுகிறார்கள், யாருக்கு அதிக முடியின் காரணத்தால் தேவையுள்ளதோ, அவர் பொதுவாக தினமும் சீவிக்கொள்ளலாம். (பைழுல் கதீர், பாகம் 6, பக்கம் 404)

❈ ரZஸவிய்யா சன்னிதானத்தில் நடந்த கேள்வி பதிலை கேளுங்கள். **கேள்வி:** தாடியை எந்தெந்த நேரங்களில் சீவ முடியும்? **பதில்:** தாடியை சீவுவதற்கு ஷரீஅத்தில் எந்தவொரு விசேட நேரமும் குறிப்பிடப்படவில்லை. நடுத்தரமாக இருப்பதே சட்டமாகும். அதாவது, மனிதன் ஜின்னுடைய உருவத்திலும் இருக்கக்கூடாது, எந்நேரமும் அலங்கரிப்பிலும் சிக்கி விடக்கூடாது (ஃபதாவா ரZஸவிய்யா, பாகம் 29, பக்கம் 92–94)

❈ சீவும்போது வலது பக்கத்திலிருந்து ஆரம்பியுங்கள். உம்முல் முஃமினீன் ஹழ்ரத் ஸய்யிததுனா ஆயிஷா


www.dawateislami.net

ஸித்தீகா رَضِیَ اللّٰہُ تَعَالٰی عَنْہَا அவர்கள் கூறுகிறார்கள். கோமான் நபி صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் ஒவ்வொரு வேளைகளையும் வலது பக்கத்திலிருந்து ஆரம்பிப்பதையே விரும்புவார்கள். எதுவரையென்றால், பாதணி அணிதல், தலை சீவுதல் இன்னும் சுத்தம் செய்வதிலும் கூட. (புஹாரி, பாகம் 1, பக்கம் 81, ஹதீஸ் 168) புஹாரியின் விரிவுரையாளர் ஹழ்ரத் அல்லாமா பத்ருத்தீன் அய்னி ஹனஃபி عَلَیْہِ رَحْمَۃُ اللّٰہِ الْقَوِی அவர்கள் இந்த பரிசுத்த ஹதீஸின் அடிப்படையில் எழுதுகிறார் கள். இந்த மூன்று விடயங்களும் உதாரணத்திற்காக கூறப்பட்டவையாகும். இல்லையெனில் சங்கையான ஒவ்வொரு நற்காரியங்களையும் வலது பக்கத்தால் ஆரம்பிப்பது முஸ்தஹப்பாகும். உதாரணமாக, மஸ்ஜிதில் நுழைதல், ஆடை அணிதல், மிஸ்வாக் செய்தல், சுர்மா போடுதல், நகம் வெட்டுதல், மீசை வெட்டுல், அக்குள் முடிகளை களைதல், வுழு செய்தல், குளித்தல், மலசல கூடத்திலிருந்து வெளியேறுதல் போன்றவை. மேலும் எந்த வேலையில் இந்த (மேன்மையுடைய) விடயம் இல்லையோ அதாவது மஸ்ஜிதை விட்டும் வெளியேறுதல், மலசல கூடத்திற்குள் நுழைதல், மூக்கை சுத்தப்படுத்தல், ஆடைகளை கழற்றுதல் போன்றவைகளில் இடது பக்கத்தை முற்படுத்துவது முஸ்தஹப்பாகும். (உம்ததுல் காரி, பாகம் 2, பக்கம் 476)



www.dawateislami.net

❋ ஜும்ஆ தொழுகைக்காக எண்ணெய் தடவுவது இன்னும் மணம் பூசுவது முஸ்தஹப்பாகும். (பஹாரெ ஷரீஅத், பாகம் 1, பக்கம் 774)

❋ நோன்புடைய நிலையில் தாடி, மீசையில் எண்ணெய் தடவுவது மக்ரூஹ் அல்ல. ஆனால் ஒரு கைபிடியளவு தாடியிருந்தும் இன்னும் நீளமாக வளர வேண்டும் என்பதற்காக எண்ணெய் தடவுவது நோன்பு இல்லாத நிலையிலும் மக்ரூஹ் ஆகும். நோன்பில் அதை விட பெரியதாகும். (பஹாரெ ஷரீஅத், பாகம் 1, பக்கம் 997)

❋ மையத்தின் தாடி அல்லது தலை முடியை சீவுவது கூடாததும், பாவமுமாகும். (துர்ரெ முக்தார், பாகம் 3, பக்கம் 104) மனிதர்கள் மையத்தின் தாடியை வழித்து விடுகிறார்கள். இதுவும் கூடாததும், பாவமுமாகும். அந்த பாவம் மையத்திற்கல்ல, மாறாக அதை வழித்த வருக்கும், அதற்காக கட்டளை பிறப்பித்தவருக்குமா கும்.

ஆயிரக்கணக்கான சுன்னாக்களை கற்பதற்கு மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட இரு நூற்களான "பஹாரெ ஷரீஅத்" 16ஆம் பாகம் (312 பக்கங்கள்) இன்னும் 120 பக்கங்கள் அடங்கிய "சுன்னதே ஓர் ஆDதாப்" ஆகிய நூற்களை வாங்கிப்படியுங்கள். தஃவதே இஸ்லாமியின் மதனி காஃபிலாக்களில் நாயகத்தின் ஆஷிகீன்களுடன்


www.dawateislami.net

பயணித்தலும் சுன்னாக்களின் பயிற்சிக்கான சிறந்ததொரு வழியாகும்.

கருணையை அடைவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்
சுன்னாக்களை கற்பதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

கஷ்டங்கள் தீர்ந்துவிடும் காஃபிலாவில் பயணியுங்கள்
கெடுதிகள் நீங்குவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே, பயானை முடிக்கின்ற இந்நேரத்தில் சுன்னத்துக்களின் சிறப்புக்களையும் மேலும் சில சுன்னத்துக்களையும், ஒழுக்கங்களையும் பயான் செய்யும் பாக்கியத்தை பெறுகிறேன். அகிலத்தின் அதிபதி அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: "யார் என் சுன்னாவை நேசிக்கின்றாரோ அவர் என்னை நேசிக்கின்றார், யார் என்னை நேசிக்கின் றாரோ அவர் சுவனத்தில் என்னோடு இருப்பார்."

(இப்னி அசாகிர், பாகம் 7, பக்கம் 343)

எஜமானாரே! எனதுள்ளம் உங்கள்
சுன்னா வாழும் இல்லமாகட்டும்

சுவனத்தில் அயல்வீட்டாளனாக
தாங்கள் எனை ஆக்க வேண்டும்


www.dawateislami.net

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## “Zசுல்:ப் வைப்பது பரிசுத்த நபியின் சுன்னாவாகும்” என்பதிலுள்ள 22 எழுத்துகளின் தொடர்பில் Zசுல்:ப் மற்றும் தலை முடிகள் போன்றவற்றின் 22 மதனி முத்துக்கள்

- நபிமார்களுக்கு முத்திரையானவர், ஈருலக அருளாளர், நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் முபாரகான Zசுல்ஃபேன் (திரு முடி) சிலசமயம் காதின் அரைவாசி வரை இருக்கும்.

- சிலவேளை முபாரகான காதின் கீழ்பகுதி வரை இருக்கும். இன்னும்

- சிலவேளை வளர்ந்திருந்தால் முபாரகான தோள் புயத்தை முத்தமிட்டுக்கொண்டிருக்கும். (அஷ்ஷமாஇலுல் முஹம்மதிய்யா லித்திர்மிதி, பக்கம் 34,35,18)

- மூன்று சுன்னாக்களையும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நாம் செய்து கொள்ள வேண்டும். அதாவது சிலவேளை காதுகளின் அரைவாசி வரை, சிலவேளை காதுகளின் கீழ்பகுதி வரை இன்னும் சிலவேளை தோல் புயங்கள் வரை வைத்துக்கொள்ளுங்கள்.



www.dawateislami.net

❋ தோள்புயம் வரை Zசுல்ஃபை வளர்த்துக் கொள்ளும் சுன்னாவை நிறைவேற்றுவது பொதுவாக நப்ஸுக்கு மிகவும் கடினமான செயலாகும். எனினும் வாழ்நாளில் ஒரு சில தடவையாவது ஒவ்வொருவரும் இந்த சுன்னாவை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். அதேபோல் முடி தோல் புயங்களுக்கு கீழே வந்து விடாமல் இருக்குமாறு முக்கிய கவனம் செலுத்த வேண்டும். தண்ணீரால் ஈரமாக்கிய பிறகு Zசுல்ஃபேயின் நீளம் நன்றாக தென்படும். ஆகவே இவ்வாறு வளர்க்கும் நாட்களில் குளித்த பின் முடியை சீவி, தோள் புயங்களுக்கு கீழே வருகிறதா என்று நன்கு கவனித்துக்கொள்ளுங்கள்.

❋ எனது தலைவர் அஃலா ஹழ்ரத் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள். "பெண்களைப்போன்று தோல் புயத்திற்கு கீழே முடியை வளர்ப்பது ஆண்களுக்கு ஹராமாகும்." (தஸ்ஹீலன் ஃபதாவா ரZஸவிய்யா, பாகம் 21, பக்கம் 600)

❋ ஸத்ருஷ் ஷரீஆ, பத்ருத் தரீகா ஹழ்ரத் அல்லாமா மௌலானா முஃப்தி முஹம்மத் அம்ஜத் அலி அஃலமி عَلَيْهِ رَحْمَةُ اللهِ الْقَوِی அவர்கள் கூறுகிறார்கள். ஆண்கள் பெண்களைப்போன்று முடி வளர்ப்பது ஜாயிZஸ் அல்ல. "சூபி" போன்று தம்மை காட்டிக் கொள்ளும் சிலர் நீண்ட நீண்ட முடிச்சுருள்களை வளர்ப்பார்கள். அது நெஞ்சில் பாம்புகளைப்போன்று


www.dawateislami.net

ஆடிக்கொண்டிருக்கும். இன்னும் சிலர் முடிகளை பின்னிக்கொள்வார்கள். அல்லது (பெண்களைப் போன்று முடிகளை சேர்த்து) கொண்டை கட்டிக் கொள்வார்கள். இவைகள் அனைத்தும் கூடாததும், ஷரீஅத்திற்கு மாற்றமானவைகளுமாகும். தஸவ்வுஃப் என்பது முடிகளை வளர்ப்பதும் இன்னும் வண்ண மயமான ஆடைகளை அணிவதற்கும் பெயரல்ல. மாறாக கண்மணி நாயகம் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களை முழுமையாக பின்பற்றுவதும், நஃப்ஸின் ஆசைகளை அழிப்பதற்கும் பெயராகும். (பஹாரெ ஷரீஅத், பாகம் 3, பக்கம் 587)

- பெண்கள் தலையை வழித்துக்கொள்வது ஹராமாகும். (சுருக்கம்– ஃபதாவா ரZஸவிய்யா, பாகம் 22, பக்கம் 664)

- கிறிஸ்துவப் பெண்கள் இக்காலத்தில் தலைமுடியை கத்தரித்துக்கொள்வது போன்று பெண்கள் தலை முடியை கத்தரிப்பது கூடாததும், பாவமுமாகும். மேலும் இச்செயல் சபிக்கப்பட்டுள்ளது. கணவன் அவ்வாறு செய்யுமாறு கூறினாலும்கூட இதுவே சட்டமாகும். அதாவது பெண் அவ்வாறு செய்தால் பாவியாவார். ஏனெனில் ஷரீஅத்திற்கு மாற்றமாக யாருடைய (அதாவது தாய், தந்தை, கணவர் போன்றவர்களின்) பேச்சையும் கேட்கக்கூடாது. (பஹாரெ ஷரீஅத், பாகம் 3, பக்கம் 588) சிறுமிகளின் முடிகளையும் ஆண்களைப்போன்று கத்தரிக்காதீர்கள்.


www.dawateislami.net

சிறுபராயத்தில் இருந்தே அவர்களுக்கு பெண்களைப் போன்று நீளமாக முடி வளர்ப்பதற்கு சிந்தனையூட்டுங்கள்.

❋ சில மனிதர்கள் வலப்பக்கமாக அல்லது இடப் பக்கமாக முடியை பிரித்து சீவிக்கொள்வார்கள். இது சுன்னாவுக்கு மாற்றமாகும்.

❋ தலையில் முடியிருந்தால் நடுவால் பிரித்து சீவிக் கொள்வது சுன்னத்தாகும். (பஹாரெ ஷரீஅத், பாகம் 3, பக்கம் 588)

❋ ஆண்கள் தலைமுடியை வழிப்பதற்கு அல்லது வளர்த்து நடுவால் பிரிப்பதற்கு உரிமையுண்டு. (ரத்துல் முஹ்தார், பாகம் 9, பக்கம் 672)

❋ நபி பெருமானார் صَلَّى اللّٰه تَعَالٰی عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களினால் இரண்டு விடயங்களும் உறுதியாகி உள்ளது. அதாவது இஹ்ராமை விட்டு வெளியேறும் நேரத்தில் மாத்திரம் வழித்துள்ளார்கள் என்பது உறுதியாகி இருப்பதோடு, ஏனைய நேரங்களில் வழிப்பது உறுதி படுத்தப்படவில்லை. (பஹாரெ ஷரீஅத், பாகம் 3, பக்கம் 586)

❋ இக்காலத்தில் கத்தரிக்கோள் அல்லது மெஷின் மூலம் முடிகளை விஷேசமான முறையில் வெட்டி, சில இடங்களில் பெரிதாகவும், சில இடங்களில்



www.dawateislami.net

சிறிதாகவும் வைக்கின்றார்கள். அவ்வாறு முடி வைப்பது சுன்னத்தல்ல.

❋ அண்ணல் நபி صَلَّى اللّٰه تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அமுதவாக்கு: “யாருக்கு முடியுள்ளதோ அவர் அதை கண்ணியப்படுத்தட்டும். (அபூதாவூத், பாகம் 4, பக்கம் 103, ஹதீஸ் 4163) அதாவது அதை கழுவி, எண்ணெய் தடவி, சீவ வேண்டும்.

❋ ஹழ்ரத் ஸய்யிதுனா இப்றாஹீம் عَلٰى نَبِيِّنَا وَعَلَيْهِ الصَّلٰوةُ وَالسَّلَام அவர்கள் முதன் முதலில் மீசையை கத்தரித்தார்கள். மேலும் முதன் முதலாக வெள்ளை முடியைப் பார்த்து, அவர்கள் கேட்டார்கள். இறைவா! இது என்ன? அதற்கு அல்லாஹ் عَزَّوَجَلَّ பதிலளித்தான். “இப்றாஹீமே! இது கண்ணியமாகும்.” அப்போது அவர்கள், எனது இறைவா! என் கண்ணியத்தை அதிகரிக்கச் செய்வாயாக! எனக்கூறினார்கள். (முவத்தா, பாகம் 2, பக்கம் 415, ஹதீஸ் 1756) புகழ்பெற்ற விரிவுரையாளர், ஹகீமுல் உம்மத், ஹழ்ரத் முஃப்தி அஹ்மத் யார்கான் عَلَيْهِ رَحْمَةُ الْحَنَّان அவர்கள் இந்த ஹதீஸின் அடிப்படையில் கூறுகிறார்கள். அவர்களுக்கு முன் எந்த நபிக்கும் மீசை பெரிதாக வளரவில்லை அல்லது வளர்ந்து அவர்கள் கத்தரித்திருப்பார்கள். ஆனால் அவர்களின் மார்க்கத்தில் மீசை கத்தரிப்பது ஷரீஅத்தின் சட்டமாக இருக்கவில்லை. இப்போது தாங்களின் மூலமாக



www.dawateislami.net

இந்த அமல் சுன்னதே இப்றாஹீமி ஆகிவிட்டது. (மிர்ஆத், பாகம் 6, பக்கம் 193)

❋ கீழ் உதட்டுக்கும், நாடிக்கும் இடைப்பட்ட, அதற்கு அக்கம் பக்கமுள்ள முடிகளை வழித்தல் அல்லது பிடுங்குதல் பித்அத்தாகும். (ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 358)

❋ கழுத்தின் முடிகளை வழிப்பது மக்ரூஹ் ஆகும். (ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 357) அதாவது தலைமுடியை வழிக்காமல் கழுத்தின் முடிகளை மாத்திரம் வழிப்பது. எவ்வாறெனில், அதிகமானவர்கள் தாடியை ஒழுங்கு படுத்தும்போது கழுத்தின் முடிகளையும் வழிப்பார்கள். ஆனால் தலைமுடி முழுவதையும் வழித்தால் அத்துடன் கழுத்திலுள்ள முடியையும் வழித்துக் கொள்ளலாம். (பஹாரெ ஷரீஅத், பாகம் 3, பக்கம் 587)

❋ நான்கு பொருட்களை புதைக்க வேண்டும் என்பது சட்டமாகும். அவையாவன: முடி, நகம், மாதவிடாய் இரத்தத்தை சுத்தம் செய்த துணி, இரத்தம். (பஹாரெ ஷரீஅத், பாகம் 3, பக்கம் 588 – ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 358)

❋ ஆண்கள் தாடி அல்லது தலையிலுள்ள வெள்ளை முடிகளைகளை சிவப்பு அல்லது மஞ்சளான நிறமிடுவது முஸ்தஹப்பாகும். இதற்காக மருதானி பயன்படுத்தலாம்.



www.dawateislami.net

- தாடி அல்லது தலையில் மருதானி போட்டுக்கொண்டு நித்திரை கொள்ளக்கூடாது. ஒரு மருத்துவரின் கருத்துப்படி இவ்வாறு மருதானி இட்ட வண்ணம் நித்திரை கொள்ளும்போது தலை போன்றவற்றிலுள்ள சூடு கண்களுக்கு இறங்குகிறது, அதன் மூலம் பார்வை பாதிப்படைகிறது. மருத்துவரின் இக்கருத்து இவ்வாறு உறுதியானது. அதாவது ஒருமுறை ஸGகே மதீனா عُفِيَ عَنهُ அவர்களிடம் ஒரு குருடர் வந்து இவ்வாறு கூறினார். நான் பிறவிக்குருடனல்ல. கைசேதம் என்னவென்றால்! ஒருநாள் தலையில் கருப்பு நிற மருதானியை இட்ட வண்ணம் நித்திரைக்குச் சென்றேன். எழுந்தபோது என் கண்களின் பார்வை சென்று விட்டிருந்தது.

- மருதானி இடுபவர்களின் மீசை, கீழ் உதடு இன்னும் தாடியை ஒழுங்குபடுத்திய ஓரங்களின் வெள்ளை முடிகள் சில நாட்களிலேயே தென்பட்டு விடும். அவை பார்ப்பதற்கும் நன்றாக விளங்காது. எனவே திரும்பத் திரும்ப உங்களின் முழு தாடிக்கும் உங்களால் நிறம் பண்ண முடியாவிட்டாலும், முயற்சி செய்து நான்கு நாட்களுக்கு ஒரு தடவை குறைந்தபட்சம் வெள்ளை முடிகள் தெளிவாகத்தெரியும் இடங்களுக்கு கொஞ்சம் மருதானி போட்டுக்கொள்ள வேண்டும்.



www.dawateislami.net

❋ ஹழ்ரத் ஸய்யிதுனா அனஸ் رَضِیَ اللّٰہ تَعَالٰی عَنْہُ அவர்கள் அறிவித்ததாக “ஷர்ஹுஸ் ஸுதூரில்” வருகிறது. எந்த மனிதர் தாடியில் சாயம் (கருப்பு சாயத்தைத் தவிர உதாரணமாக சிவப்பு அல்லது மஞ்சலான மருதானி) போடுகிறாரோ மரணத்திற்கு பிறகு முன்கர், நகீர் அவரிடம் கேள்வி கணக்கு கேட்க மாட்டார்கள். முன்கர் கூறுவார், நகீரே! நான் இவரிடம் எப்படி கேள்வி கேட்பது? இவரது முகத்தில் இஸ்லாத்தின் ஒளி பிரகாசிக்கின்றது. (ஷர்ஹுஸ் ஸுதூர், பக்கம் 152)

ஆயிரக்கணக்கான சுன்னாக்களை கற்பதற்கு மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட இரு நூற்களான “பஹாரெ ஷரீஅத்” 16ஆம் பாகம் (312 பக்கங்கள்) இன்னும் 120 பக்கங்கள் அடங்கிய “சுன்னதே ஓர் ஆDதாப்” ஆகிய நூற்களை வாங்கிப்படியுங்கள். தஃவதே இஸ்லாமியின் மதனி காஃபிலாக்களில் நாயகத்தின் ஆஷிகீன்களுடன் பயணித்தலும் சுன்னாக்களின் பயிற்சிக்கான சிறந்ததொரு வழியாகும்.

கருணையை அடைவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்
சுன்னாக்களை கற்பதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்
கஷ்டங்கள் தீர்ந்துவிடும் காஃபிலாவில் பயணியுங்கள்
கெடுதிகள் நீங்குவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

صَلُّوْا عَلَی الْحَبِیْب    صَلَّی اللّٰہُ تَعَالٰی عَلٰی مُحَمَّد


www.dawateislami.net

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே, பயானை முடிக்கின்ற இந்நேரத்தில் சுன்னத்துக்களின் சிறப்புக்களை யும் மேலும் சில சுன்னத்துக்களையும், ஒழுக்கங்களையும் பயான் செய்யும் பாக்கியத்தை பெறுகிறேன். அகிலத்தின் அதிபதி அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: “யார் என் சுன்னாவை நேசிக்கின்றாரோ அவர் என்னை நேசிக்கின்றார், யார் என்னை நேசிக்கின் றாரோ அவர் சுவனத்தில் என்னோடு இருப்பார்.”

(இப்னி அசாகிர், பாகம் 7, பக்கம் 343)

எஜமானாரே! எனதுள்ளம் உங்கள்
சுன்னா வாழும் இல்லமாகட்டும்

சுவனத்தில் அயல்வீட்டாளனாக
தாங்கள் எனை ஆக்க வேண்டும்

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## “மதனி ஆடையை கடைபிடியுங்கள்” என்பதிலுள்ள 14 எழுத்துகளின் தொடர்பில் ஆடையை பற்றிய 14 மதனி முத்துக்கள்

முதலில் அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் மூன்று அமுதவாக்குகளை கேளுங்கள்:



www.dawateislami.net

❋ ஜின்களின் கண்களுக்கும், மனிதர்களின் அவ்ரத்துக்கும் இடையே உள்ள திரை எதுவென்றால், யாராவது ஆடைகளை கழட்டும்போது بِسْمِ اللّٰه கூறிக் கொள்வதாகும். (அல் முஃஜமுல் அவ்ஸத், பாகம் 2, பக்கம் 59, ஹதீஸ் 2504) புகழ்பெற்ற விரிவுரையாளர், ஹகீமுல் உம்மத், ஹழ்ரத் முஃப்தி அஹ்மத் யார்கான் عَلَيْهِ رَحْمَةُ الْحَنَّان அவர்கள் கூறுகிறார்கள். சுவரும், பர்தாவும் மனிதர்களின் பார்வைக்கு எவ்வாறு தடுப்பாக இருக்கிறதோ, அதேபோல் இதுவுமாகும், அல்லாஹ் (عَزَّوَجَلَّ) வுடைய திக்ர் ஜின்களின் பார்வைக்கு தடுப்பாக ஆகி விடும். ஆகையால் ஜின்கள் அதை (அதாவது மர்மஸ்தானத்தை) பார்க்க முடியாது. (மிர்ஆத், பாகம் 1, பக்கம் 268)

❋ எந்த மனிதர் ஆடை அணியும்போது இதை கூறுகிறாரோ اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِی كَسَانِیْ هٰذَا وَرَزَقَنِيْهِ مِنْ غَيْرِ حَوْلٍ مِّنِّیْ وَلَا قُوَّةٍ அவருடைய முன் பின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. (ஷுஅபுல் ஈமான், பாகம் 5, பக்கம் 181, ஹதீஸ் 6285)

**துஆவின் பொருள்:** எனக்கு இந்த ஆடையை அணிவித்து இன்னும் எனது எவ்வித சக்தியும் ஆற்றலுமின்றி எனக்கு உபகாரம் செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்!


www.dawateislami.net

❋ எவருக்கு பெறுமதியான ஆடை அணிய சக்தியிருந்தும், பணிவுக்காக அதை அணியாமல் விடுகிறாரோ அல்லாஹுதஆலா அவருக்கு கராமத் எனும் ஆடையை அணிவிப்பான். (அபூதாவூத், பாகம் 4, பக்கம் 326, ஹதீஸ் 4778)

❋ நபிமார்களுக்கு முத்திரையானவர், ஈருலக அருளாளர், அண்ணல் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் முபாரகான ஆடை அதிகமாக வெள்ளையாகவே இருந்தது. (கஷ்ஃபுல் இல்திபாஸ் ஃபிஸ்திஹ்Bபாபில் லிபாஸ் லிஷ்ஷெய்க் அப்துல் ஹக் தெஹ்லவி, பக்கம் 36)

❋ ஆடை ஹலாலான சம்பாத்தியத்தில் உள்ளதாக இருக்க வேண்டும். எந்த ஆடை ஹராமான சம்பாத்தியத்தில் இருந்து பெறப்பட்டதோ, அதன் மூலம் பர்ள் மற்றும் நஃப்லான எந்த தொழுகையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. (கஷ்ஃபுல் இல்திபாஸ் ஃபிஸ்திஹ்Bபாபில் லிபாஸ் லிஷ்ஷெய்க் அப்துல் ஹக் தெஹ்லவி, பக்கம் 41)

❋ அறிவிக்கப்பட்டுள்ளது: எவர் அமர்ந்துக் கொண்டு தலைப்பாகை அணிகிறாரோ அல்லது நின்றுக் கொண்டு காற்சட்டை அணிகிறாரோ, அல்லாஹ் عَزَّوَجَلَّ மருந்தே இல்லாத நோயில் அவரை சிக்க வைப்பான்.



www.dawateislami.net

(கஷ்ஃபுல் இல்திபாஸ் ஃபிஸ்திஹ்BபாBபில் லிபாஸ் லிஷ்ஷெய்க் அப்துல் ஹக் தெஹ்லவி, பக்கம் 39)

- ❋ அணியும்போது வலது பக்கத்திலிருந்து ஆரம்பியுங்கள். (இது சுன்னத்தாகும்) உதாரணமாக: குர்தா அணியும்போது முதலில் சட்டையின் வலது கைப்பக்கம் வலது கையையும், பின்பு இடது பக்கம் இடதையும் போடவேண்டும். (கஷ்ஃபுல் இல்திபாஸ் ஃபிஸ்திஹ்BபாBபில் லிபாஸ் லிஷ்ஷெய்க் அப்துல் ஹக் தெஹ்லவி, பக்கம் 43)

- ❋ அதேபோல் காற்சட்டை போடும்போது முதலில் வலது காலை, காற்சட்டையின் வலப்பக்கம் போடவும். மேலும் (குர்தா அல்லது காற்சட்டையை) கழட்டும்போது இதற்கு மாற்றமாக இடது பக்கத்தால் ஆரம்பியுங்கள்.

- ❋ தஃவதே இஸ்லாமியின் வெளியீட்டு நிறுவனமான மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட 1197 பக்கங்கள் அடங்கிய "பஹாரெ ஷரீஅத்" 3ம் பாகம் 409ம் பக்கத்தில் உள்ளது. சுன்னத் இதுவாகும், அதாவது ஆடையின் கீழ்பகுதி முழங்காலுக்கும், கரண்டைகாலுக்கும் இடைப்பட்ட பகுதி வரையும், கைகளின் நீட்டம் ஆகக்கூடியது விரல்களின் அங்குல கோடுகள் வரையும் மேலும் அகலம் ஒரு சான் அளவாகவும் இருப்பதாகும். (ரத்துல் முஹ்தார், பாகம் 9, பக்கம் 579)



www.dawateislami.net

- ஆண்களின் லுங்கி அல்லது காற்சட்டை கரண்டை காலுக்கு மேல் இருப்பது சுன்னத்தாகும். (மிர்ஆத், பாகம் 6, பக்கம் 94)

- ஆண்கள் ஆண்களின் ஆடையையும், பெண்கள் பெண்களின் ஆடையையும் அணிய வேண்டும். சிறுவர், சிறுமிகளுக்கு இடையிலும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

- தஃவதே இஸ்லாமியின் வெளியீட்டு நிறுவனமான மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட 1250 பக்கங்கள் அடங்கிய “பஹாரெ ஷரீஅத்” 1ம் பாகம் 481ம் பக்கத்தில் உள்ளது. தொப்புளிலிருந்து முழங்கால்வரை ஆண்களின் அவ்ரத்தாகும். அதாவது அதை மறைப்பது பர்ளாகும். தொப்புள் அதில் உள்ளடங்காது மேலும் முழங்கால் உள்ளடங்கும். (துர்ரெ முக்தார், ரத்துல் முஹ்தார், பாகம் 2, பக்கம் 93) இக்காலத்தில் அதிகமானோர் லுங்கி அல்லது காற்சட்டையை தொப்புளின் கீழுள்ள சில பகுதி திறந்த வண்ணம் அணிகிறார்கள். குர்தா போன்றவை களை அணிவதன் மூலம் தோலினுடைய நிறம் தென்படாவிட்டால் சரி. இல்லையெனில் ஹராமாகும். மேலும் தொழுகையில் நான்கின் ஒரு பகுதி (1/4) திறந்திருந்தால் தொழுகை கூடாது. (பஹாரெ ஷரீஅத்)


www.dawateislami.net

குறிப்பாக ஹஜ், உம்ராவின் இஹ்ராம் அணிந்திருப்ப வர்கள் இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

❋ இக்காலத்தில் சிலர் அரைக்காற்சட்டை (HALF PANT) அணிந்துக்கொண்டு பொது இடங்களில் மக்களுக்கு முன்னால் நடமாடுகிறார்கள். இதனால் அவர்களின் முழங்காலும், தொடையும் தென்படுகின்றது. இது ஹராமாகும். இப்படிப்பட்டவர்களின் திறக்கப்பட்ட முழங்கால் மற்றும் தொடைகளின் பக்கம் பார்வை செலுத்துவதும் ஹராமாகும். குறிப்பாக விளையாட்டு மைதானங்கள், உடற்பயிற்சி நிலையங்கள் மேலும் கடலோரங்களிலும் இவ்வாறான காட்சிகள் அதிகமாக உள்ளது. எனவே இப்படியான இடங்களுக்கு செல்வதில் பேணுதல் மிக அவசியமாகும்.

❋ பெருமைக்காக அணியும் ஆடைகள் தடுக்கப் பட்டதாகும். பெருமை உண்டா? இல்லையா? என்பதை இவ்வாறு அடையாளப்படுத்தலாம். அதாவது, இந்த ஆடையை அணியும் முன் தனக்கு இருந்த நிலை, அணிந்த பிறகும் அப்படியே இருக்குமானால், இந்த ஆடையின் மூலம் பெருமை ஏற்படவில்லை என்பதை விளங்கிக்கொள்ளலாம். மேலும் அவரின் நிலை மாறி விட்டால் பெருமை வந்து விட்டது. ஆகவே அப்படியான ஆடையை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள். ஏனெனில் பெருமை மிகவும் மோசமான பண்பாகும்.



www.dawateislami.net

(பஹாரெ ஷரீஅத், பாகம் 3, பக்கம் 409, ரத்துல் முஹ்தார், பாகம் 9, பக்கம் 579)

## மதனி தோற்றம்

தாடி, சுல்பேன், தலையில் பச்சை நிற தலைப்பாகை, சுன்னத்தான முறையில் முழங்காலுக்கும், கரண்டை காலுக்கும் மத்தியில் வெள்ளை குர்தா, சட்டையின் கைப்பகுதி ஒரு சான் அகலமும், நெஞ்சில் உள்ளத்தின் பக்கம் இருக்கும் பாக்கெட்டில் மிஸ்வாக் வைப்பதற்கான இடம், கரண்டை காலுக்கு மேலாக காற்சட்டை. (தலையில் வெள்ளை போர்வையும், போர்வை மேல் போர்வை போட்டு மதனி இன்ஆமாத் பிரகாரம் அமல் செய்தவாறு BROWN போர்வையும் வைத்திருந்தால் மிகச்சிறந்தது)

**அத்தாரின் துஆ:** யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! எனக்கும், மதனி தோற்றத்தில் வாழும் அனைத்து இஸ்லாமிய சகோதரர் களுக்கும் பச்சை குBப்பாவின் நிழலில் ஷஹாதத்தையும், ஜன்னதுல் பகீயில் அடக்கப்பட்டு, ஜன்னதுல் பிரதௌஸில் இனிய நேசர் கண்மணி நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களுடைய அயல் வீட்டாளனாக இருக்கும் பாக்கியத்தையும் தருவாயாக! யா அல்லாஹ்! அனைத்து உம்மத்தினர்களின் பாவங்களையும் மன்னிப்பாயாக!

اٰمِيْن بِجَاهِ النَّبِيِّ الْاَمِيْن صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم


www.dawateislami.net

அன்னவர்களின் ஆஷிக் தலைப்பாபை, Zஸுல்ப், தாடியுடன்
மதனி தோற்றத்தில் எவ்வளவு அழகாக தோற்றமளிக்கிறார்

ஆயிரக்கணக்கான சுன்னாக்களை கற்பதற்கு மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட இரு நூற்களான “பஹாரெ ஷரீஅத்” 16ஆம் பாகம் (312 பக்கங்கள்) இன்னும் 120 பக்கங்கள் அடங்கிய “சுன்னதே ஓர் ஆDதாப்” ஆகிய நூற்களை வாங்கிப்படியுங்கள். தஃவதே இஸ்லாமியின் மதனி காஃபிலாக்களில் நாயகத்தின் ஆஷிகீன்களுடன் பயணித்தலும் சுன்னாக்களின் பயிற்சிக்கான சிறந்ததொரு வழியாகும்.

கருணையை அடைவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்
சுன்னாக்களை கற்பதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

கஷ்டங்கள் தீர்ந்துவிடும் காஃபிலாவில் பயணியுங்கள்
கெடுதிகள் நீங்குவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே, பயானை முடிக்கின்ற இந்நேரத்தில் சுன்னத்துக்களின் சிறப்புக்களையும் மேலும் சில சுன்னத்துக்களையும், ஒழுக்கங்களையும் பயான் செய்யும் பாக்கியத்தை பெறுகிறேன். அகிலத்தின் அதிபதி அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: “யார் என் சுன்னாவை நேசிக்கின்றாரோ


www.dawateislami.net

அவர் என்னை நேசிக்கின்றார், யார் என்னை நேசிக்கின்றாரோ அவர் சுவனத்தில் என்னோடு இருப்பார்.” (இப்னி அசாகிர், பாகம் 7, பக்கம் 343)

எஜமானாரே! எனதுள்ளம் உங்கள்
சுன்னா வாழும் இல்லமாகட்டும்

சுவனத்தில் அயல்வீட்டாளனாக
தாங்கள் எனை ஆக்க வேண்டும்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## “தலைப்பாகை அணிவது அண்ணலின் முபாரகான சுன்னாவாகும்” என்பதிலுள்ள 25 எழுத்துகளின் தொடர்பில் தலைப்பாகையின் 25 மதனி முத்துக்கள்

நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் 6 பொன்மொழிகள்:

❋ தலைப்பாகையுடன் இரண்டு ரக்அத் தொழுவது தலைப்பாகை இல்லாமல் 70 ரக்ஆத் தொழுவதை விட சிறந்தது. (அல்பிர்தௌஸ் Bபிமஃஸூரில் கத்தாப், பாகம் 2, பக்கம் 265, ஹதீஸ் 3233)



www.dawateislami.net

- தொப்பிக்கு மேல் தலைப்பாகை அணிவதே நமக்கும் முஷ்ரிகீன்களுக்கும் மத்தியிலுள்ள வித்தியாசமாகும். ஒரு முஸ்லிம் தலைப்பாகையை சுற்றிக்கட்டும் ஒவ்வொரு மடிப்புக்காகவும், கியாம நாளன்று அவருக்கு ஒரு நூர் வழங்கப்படும். (அல் ஜாமிஉஸ் ஸகீர் லிஸ்ஸுயூதி, பக்கம் 353, ஹதீஸ் 5725)

- நிச்சயமாக வெள்ளிக்கிழமையில் தலைப்பாகை அணிபவருக்கு அல்லாஹ் عَزَّوَجَلَّ வும், அவனுடைய மலக்குகளும் ஸலவாத்தை அனுப்பி வைக்கிறார்கள். (அல் பிர்தௌஸ் Bபிமஃஸூரில் கத்தாப், பாகம் 1, பக்கம் 147, ஹதீஸ் 529)

- தலைப்பாகை அணிந்து தொழுவது பத்தாயிரம் நன்மைகளுக்கு சமமாகும். (அல் பிர்தௌஸ் Bபிமஃஸூரில் கத்தாப், பாகம் 2, பக்கம் 406, ஹதீஸ் 3805 – ஃபதாவா ரZஸவிய்யா முகர்ரஜா, பாகம் 6, பக்கம் 213)

- தலைப்பாகையுடன் ஒரு ஜும்ஆ தொழுவது, தலைப்பாகை இல்லாமல் 70 ஜும்ஆ தொழுவதற்கு சமமாகும். (இப்னி அசாகிர், பாகம் 37, பக்கம் 355)

- தலைப்பாகை அரேபியர்களின் கிரீடமாகும். எனவே தலைப்பாகை அணியுங்கள், உங்களின் கண்ணியம் அதிகரிக்கும். மேலும் யாராவது தலைப்பாகை அணிந்தால் ஒவ்வொரு மடிப்பிற்கும் அவருக்கு ஒரு



www.dawateislami.net

நன்மையுண்டு. (கன்Zஸுல் உம்மால், பாகம் 15, பக்கம் 133, இலக்கம் 41138)

- தஃவதே இஸ்லாமியின் வெளியீட்டு நிறுவனமான மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட 1197 பக்கங்கள் அடங்கிய “பஹாரெ ஷரீஅத்” 3ம் பாகம் 660ம் பக்கத்தில் உள்ளது. தலைப்பாகையை எழுந்து நின்று கட்டுங்கள். காற்சட்டையை (பாஜாமா) உட்கார்ந்து அணியுங்கள். யாராவது இதற்கு மாற்றமாகச் செய்தால் (அதாவது தலைப்பாகையை இருந்துக்கொண்டும், காற்சட்டையை எழுந்து நின்றும் அணிவாரேயானால்) மருந்தே இல்லாத நோயினால் அவர் பாதிக்கப்படுவார்.

- தலைப்பாகையை கட்டுவதற்கு முன்னால் சற்று தாமதித்து, நல்ல நல்ல நிய்யத்துக்களை வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் ஒரு நல்ல நிய்யத்தாவது இருக்காவிட்டால் நன்மை கிடைக்காது. ஆகவே குறைந்தது சுன்னத்தான தலைப்பாகையை அல்லாஹ் عَزَّوَجَلَّ வுடைய திருப்பொருத்தத்திற்காக கட்டுகிறேன் என்று நிய்யத் வைத்துக்கொள்ளுங்கள்.

- தலைப்பாகையின் முதலாவது மடிப்பை தலையின் வலது பக்கமாக சுற்றுவதே சிறந்த முறையாகும். (ஃபதாவா ரZஸவிய்யா, பாகம் 22, பக்கம் 199)



www.dawateislami.net

- ரஸூல்மார்களின் தலைவர், ஈருலக அருளாளர் கண்மணி நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் முபாரகான தலைப்பாகையின் ஷிம்லாஹ் (சுற்றப்படாத கடைசி பகுதி) பொதுவாக முபாரகான முதுகின் பின்னால் இருக்கும். சிலநேரங்களில் வலது பக்கமும், சில நேரங்களில் அன்னவர்களின் முபாரகான முதுகின் இரண்டு தோள்களுக்கும் மத்தியில் இரண்டு ஷிம்லாக்கள் இருக்கும். மேலும் ஷிம்லாவை இடது புறம் தொங்க வைப்பது சுன்னத்துக்கு மாற்றமாகும். (அஷிஃஅதுல் லம்ஆத், பாகம் 3, பக்கம் 582)

- தலைப்பாகையின் ஷிம்லாஹ் குறைந்தபட்சம் நான்கு விரல்களின் அளவு இருக்க வேண்டும். மேலும்

- ஆகக்கூடிய அளவு (நடு முதுகு வரை அதாவது கிட்டத்தட்ட) ஒரு கையளவு இருக்க வேண்டும். (ஃபதாவா ரZஸவிய்யா, பாகம் 22, பக்கம் 182) (நடுவிரலின் நுணியில் இருந்து முட்டுக்கை வரையுள்ள அளவை ஒரு கையென்று சொல்லப்படும்)

- கிப்லாவை முன்னோக்கி நின்றுக்கொண்டு தலைப் பாகை கட்டுங்கள். (கஷ்ஃபுல் இல்திபாஸ் ஃபிஸ்திஹ்Bபாபில் லிபாஸ், பக்கம் 38)

- தலைப்பாகையில் சுன்னத் இதுவாகும். அதாவது $2^{1/2}$ அடியை விட குறையாமலும், 6 அடியை விட



www.dawateislami.net

கூடாமலும் இருப்பதோடு, அது குBப்பாவின் வடிவத்தில் கட்டப்படல் வேண்டும். (ஃபதாவா ரZஸவிய்யா, பாகம் 22, பக்கம் 186)

- தலை முழுவதையும் மூடக்கூடிய அளவு மடிப்புக்களை தரக்கூடிய பெரிய கைக்குட்டை இருந்தால், அதுவே தலைப்பாகையாகும். மேலும்

- ஒன்று அல்லது இரண்டு மடிப்புக்களைத் தரக்கூடிய ஒரு சிறிய கைக்குட்டையால் சுற்றிக்கொள்வது மக்ரூஹ் ஆகும். (பதாவா ரZஸவிய்யா முகர்ரஜா, பாகம் 7, பக்கம் 299)

- தலைப்பாகையை திரும்பவும் புதிதாக கட்டவேண்டுமாயின், நீங்கள் எவ்வாறு கட்டினீர்களோ அவ்வாறே பிரியுங்கள். ஒரே தடவையில் கலட்டி தரையில் போட வேண்டாம். (ஆலம்கீரீ, பாகம் 5, பக்கம் 330)

- தலைப்பாகையை மீண்டும் கட்டவேண்டும் என்ற நிய்யத்துடன் தேவைக்காக கழற்றும்போது, ஒவ்வொரு மடிப்பை திறக்கும்போதும் ஒவ்வொரு பாவம் மன்னிக்கப்படுகின்றன. (முலக்கஸ் அZஸ் ஃபதாவா ரZஸவிய்யா முகர்ரஜா, பாகம் 6, பக்கம் 214)

தலைப்பாகையின் 6 மருத்துவ பயன்களை கவனியுங்கள்:



www.dawateislami.net

- தலையை திறந்திருப்பவர்களுடைய முடிகளின் மீது குளிர், சூடு இன்னும் வெயில் போன்றவைகளின் நேரடியான தாக்கம் ஏற்படுகின்றது. அதனால் முடிகள் மாத்திரமல்ல மூலையும், முகமும் கூட தாக்கப்படுவதுடன் ஆரோக்கியமும் பாதிப்படையலாம். ஆகவே சுன்னத்தை பின்பற்றும் நோக்கத்துடன் தலைப்பாகை அணிவதால் ஈருலகிலும் பாதுகாப்பு கிடைக்கிறது.

- மருத்துவ ஆய்வின்படி தலைவலிக்காக தலைப்பாகை அணிவது அதிக பிரயோஜத்தை ஏற்படுத்தும்.

- தலைப்பாகை அணிவதால் மூலைக்கு சக்தி கிடைப்பதுடன், ஞாபக சக்தியும் வலுவடைகிறது.

- தலைப்பாகை அணிவதால் நேமமாக தடுமல் ஏற்படாது. அல்லது அவ்வாறு ஏற்பட்டாலும் அதன் பாதிப்பு குறைவாக இருக்கும்.

- தலைப்பாகையின் ஷிம்லா உடலின் கீழ் மட்ட பக்கவாதத்தை பாதுகாக்கும். ஏனெனில் ஷிம்லா முதுகெலும்பை காலநிலையிலிருந்து உதாரணமாக குளிர், உஷ்னம் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கும்.

- தலைப்பாகையின் ஷிம்லா மூலை வீக்க நோயின் பாதிப்பை குறைக்கும். இந்நோய்க்கு “ஷர்ஷாம்” என்று சொல்லப்படும்.



www.dawateislami.net

❁ முஹக்கிக் அலல் இத்லாக், காதிமுல் முஹத்திஸீன், ஹழ்ரத் அல்லாமா ஷெய்க் அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி عَلَيْهِ رَحْمَةُ اللهِ الْقَوِى அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் முபாரகான தலைப்பாகை அதிகமாக வெள்ளை யாகவும், சிலசமயம் கருப்பாகவும் இன்னும் சிலசமயம் பச்சையாகவும் இருந்தது.” (கஷ்ஃபுல் இல்திபாஸ் ஃபிஸ்திஹ்BபாBபில் லிபாஸ் லிஷ்ஷெய்க் அப்துல் ஹக் தெஹ்லவி, பக்கம் 38)

اَلْحَمْدُ لِلّٰه عَزَّوَجَلّ அகிலத்தின் அதிபதி, அண்ணல் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் தங்களின் முபாரகான தலையில் பச்சை நிற தலைப்பாகை அணிந்திருக்கிறார்கள். தஃவதே இஸ்லாமி பச்சை நிற தலைப்பாகையை தனது அடையாளச் சின்னமாக ஆக்கியுள்ளது. பச்சை நிற தலைப்பாகைக்கு எத்தகைய சிறப்புக்கள்! மக்கத்து மாமன்னர், மதீனத்து மாவேந்தர் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர் களின் ஒளிக்கதிர் வீசும் ரௌழாவுக்கு மேலாக பளபளப் பாக இலங்கிக்கொண்டிருக்கும் குBப்பாவும் பச்சை நிறமே! எனவே நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் நேசர்க ளும் தங்கள் தலைகளை பச்சை நிறத்தால் ஜொலிக்கச் செய்ய பச்சை நிற தலைப்பாகையை அணிந்துக்கொள்ள வேண்டும். மேலும் கடும் (Dark) பச்சையாக இருக்காமல், அழகான இலேசான (Light) பச்சையாக இருக்க வேண்டும். ஏனெனில் தூரத்திலிருந்து பார்க்கும்போது இரவின்


www.dawateislami.net

இருளிலும் அழகாகவும், பிரகாசமாகவும் இருப்பதை இலகுவாக கண்டுக்கொள்ள முடியும்.

சூரிய, சந்திரனின் எவ்வித
தேவையுமில்லை மதீனாவுக்கு

அங்கு இரவு பகல் அன்னவர்களின்
பச்சை குBப்பா இலங்குகிறது

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

ஆயிரக்கணக்கான சுன்னாக்களை கற்பதற்கு மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட இரு நூற்களான “பஹாரெ ஷரீஅத்” 16ஆம் பாகம் (312 பக்கங்கள்) இன்னும் 120 பக்கங்கள் அடங்கிய “சுன்னதே ஓர் ஆDதாப்” ஆகிய நூற்களை வாங்கிப்படியுங்கள். தஃவதே இஸ்லாமியின் மதனி காஃபிலாக்களில் நாயகத்தின் ஆஷிகீன்களுடன் பயணித்தலும் சுன்னாக்களின் பயிற்சிக்கான சிறந்ததொரு வழியாகும்.

கருணையை அடைவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்
சுன்னாக்களை கற்பதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

கஷ்டங்கள் தீர்ந்துவிடும் காஃபிலாவில் பயணியுங்கள்
கெடுதிகள் நீங்குவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்



www.dawateislami.net

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே, பயானை முடிக்கின்ற இந்நேரத்தில் சுன்னத்துக்களின் சிறப்புக்களை யும் மேலும் சில சுன்னத்துக்களையும், ஒழுக்கங்களையும் பயான் செய்யும் பாக்கியத்தை பெறுகிறேன். அகிலத்தின் அதிபதி அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: “யார் என் சுன்னாவை நேசிக்கின்றாரோ அவர் என்னை நேசிக்கின்றார், யார் என்னை நேசிக்கின் றாரோ அவர் சுவனத்தில் என்னோடு இருப்பார்.”

(இப்னி அசாகிர், பாகம் 7, பக்கம் 343)

எஜமானாரே! எனதுள்ளம் உங்கள்
சுன்னா வாழும் இல்லமாகட்டும்

சுவனத்தில் அயல்வீட்டாளனாக
தாங்கள் எனை ஆக்க வேண்டும்

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد


www.dawateislami.net

## “மோதிரத்தின் அத்தியாவசிய சட்டங்கள்” என்பதிலுள்ள 19 எழுத்துகளின் தொடர்பில் மோதிரத்தின் 19 மதனி முத்துக்கள்

- ஆண்கள் தங்க மோதிரம் அணிவது ஹராமாகும். ஈருலக அருளாளர், நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் தங்கத்தில் மோதிரம் அணிவதை தடுத்துள்ளார்கள். (ஸஹீஹ் புஹாரி, பாகம் 4, பக்கம் 67, ஹதீஸ் 5863)

- (பருவ வயதை அடையாத) ஆண் பிள்ளைகளுக்கு தங்கம், வெள்ளியிலான நகைகளை அணிவிப்பது ஹராமாகும். மேலும் யார் அணிவிக்கிறாரோ அவர் பாவியாவார். அதேபோல் ஆண் பிள்ளைகளின் கை, கால்களில் தேவையின்றி மருதானி போடுவதும் கூடாது. பெண்கள் தனது கை, கால்களில் போட்டுக் கொள்ளலாம். ஆனால் ஆண் பிள்ளைகளுக்கு போட்டால் பாவியாவார். (பஹாரெ ஷரீஅத், பாகம் 3, பக்கம் 428 – துர்ரே முக்தார் வ ரத்துல் முஹ்தார், பாகம் 9, பக்கம் 598) சிறு பெண்பிள்ளைகளின் கை, கால்களில் மருதானி போடுவதில் தடையேதும் கிடையாது.

- இரும்பினால் செய்யப்பட்ட மோதிரம் நரகவாதிகளின் ஆபரணமாகும். (திர்மிதி, பாகம் 3, பக்கம் 305, ஹதீஸ் 1792)



www.dawateislami.net

- ❋ ஆண்களுக்கென்று அமைக்கப்பட்ட மோதிரமே ஆண்களுக்கு ஆகுமாகும். அதாவது ஒரு கல் மாத்திரம் இருக்க வேண்டும். அதில் ஒன்றுக்கு அதிகமான கற்கள் இருந்தால், அது வெள்ளியாகவே இருந்தாலும் ஆண்களுக்கு கூடாது. (ரத்துல் முஹ்தார், பாகம் 9, பக்கம் 597)

- ❋ கல் இல்லாத மோதிரம் அணிவது ஆகாது. ஏனெனில் அது மோதிரமல்ல, மாறாக உலோக ஆபரணம் ஆகும்.

- ❋ முகத்தஆத்துடைய (அதாவது சில சூராக்களின் ஆரம்பத்தில் வரும் الٓمّٓ போன்ற) எழுத்துக்கள் பொதிந்த மோதிரம் அணிவது கூடும். ஆனால் முகத்தஆத்துடைய எழுத்துக்கள் பொதிந்த மோதிரத்தை வுழு இல்லாமல் அணிவது, தொடுவது அல்லது முஸாஃபஹா செய்யும்போது கைகொடுப்பவர் இந்த மோதிரத்தை வுழு இல்லாமல் தொடுவது கூடாது.

- ❋ அதேபோல் ஆண்கள் ஒன்றை விட அதிகமாக (ஆகுமாக்கப்பட்ட) மோதிரம் போடுவது அல்லது உலோகத்தினால் செய்யப்பட்ட மோதிரம் ஒன்றோ அல்லது ஒன்றை விட அதிகமாகவோ போடுவது கூடாது. ஏனெனில் இது (உலோக மோதிரம்) மோதிரமல்ல. பெண்கள் உலோகத்தினால் செய்யப்பட்ட


www.dawateislami.net

மோதிரம் போடலாம். (பஹாரெ ஷரீஅத், பாகம் 3, பக்கம் 428)

❋ வெள்ளியின் ஒரு மோதிரம் ஒரு கல்லின் பாரம் நான்கரை மாஷாவை (அதாவது நான்கு கிராம் 374 மில்லி கிராமை) விட குறைவாக இருக்க வேண்டும். முத்திரையின் தேவை இல்லாவிட்டாலும் அணிவது ஜாயிZஸாகும். (ஆனால்) அதை விட்டுவிடுவது (அதாவது யாருக்கு முத்திரையின் தேவையில்லையோ அவர் ஆகுமாக்கப்பட்ட மோதிரத்தையும் போடாமல் இருப்பது) மிகச்சிறந்ததாகும். மேலும் (யாருக்கு மோதிரத்தால் முத்திரையிடும் தேவை உள்ளதோ அவருக்கு) முத்திரையிடுவதற்காக போடுவது ஜாயிZஸ் மட்டுமன்றி சுன்னத்தாகும். ஆம், பெருமைக்காக அல்லது பெண்களைப்போன்று அலங்காரம் செய்வதற்காக அல்லது வேறு ஏதாவது மோசமான நோக்கத்துடன் ஒரு மோதிரம் மட்டுமல்ல, அப்படியான நிய்யத்துடன் நல்ல ஆடைகள் அணிவதும் ஜாயிZஸ் அல்ல. (ஃபதாவா ரZஸவிய்யா, பாகம் 22, பக்கம் 141)

❋ பொருநாட்களில் மோதிரம் அணிவது முஸ்தஹப்பாகும். (பஹாரெ ஷரீஅத், பாகம் 1, பக்கம் 779,780) ஆனால் ஆண்கள் அந்த ஆகுமாக்கப்பட்ட மோதிரத்தையே அணியுங்கள்.


www.dawateislami.net

- ❉ யாருக்கு முத்திரை (Stamp) பதிக்கும் தேவையுள்ளதோ அவர்களுக்கே மோதிரம் சுன்னத்தாகும். உதாரணமாக, அரசன், காழி, மேலும் ஃபத்வாவின் மீது (மோதிரத்தால்) முத்திரை பதிக்கக்கூடிய உலமாக்கள். அவர்களைத் தவிர முத்திரை பதிக்கும் தேவையற்ற ஏனையோருக்கு சுன்னத்தல்ல, பொதுவாக மோதிரம் ஜாயிZஸாகும். (ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 335) இக்காலத்தில் மோதிரத்தால் முத்திரை பதிக்கும் வழக்கம் இல்லை. மாறாக அந்த வேலைக்காக “Stamp” தயாரிக்கப்படுகிறது. ஆகவே யாருக்கு முத்திரை பதிக்கும் தேவையில்லையோ அந்த காழி போன்றோருக்கும் மோதிரம் போடுவது சுன்னத்தல்ல.

- ❉ மோதிரத்தில் கல் பதித்த பகுதியை ஆண்கள் கையின் உற்புறமாகவும், பெண்கள் வெளிப்புறமாகவும் அணிய வேண்டும். (அல்ஹிதாயா, பாகம் 4, பக்கம் 367)

- ❉ வெள்ளியினால் செய்யப்பட்ட வெறும் மோதிரம் பெண்களின் விஷேட ஆபரணமாகும். ஆண்களுக்கு மக்ரூஹ் (தஹ்ரீமியும், கூடாத பாவமான காரியமும்) ஆகும். (ஃபதாவா ரZஸவிய்யா, பாகம் 22, பக்கம் 130)

- ❉ பெண்கள் தங்கம், வெள்ளி அல்லது உலோகத்தினால் செய்யப்பட்ட எத்தனை மோதிரம் வேண்டுமானாலும் போடலாம். இதில் கல்லின் எண்ணிக்கை மற்றும் பாரத்திற்கு எவ்வித நிபந்தனையும் கிடையாது.


www.dawateislami.net

- இரும்பு மோதிரத்தில் இரும்பு விளங்காதவாறு வெள்ளியால் முழாம் பூசப்பட்டிருந்தால், அதை அணிவதில் (ஆண், பெண் யாருக்கும்) தடையேது மில்லை. (ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 335)

- இரண்டு கைகளில் ஏதாவது ஒரு கையில் மோதிரம் போடலாம். மேலும் அதை சின்ன விரலில் போடுங்கள். (ரத்துல் முஹ்தார், பாகம் 9, பக்கம் 596)

- நேர்ச்சையின் அல்லது ஓதி ஊதப்பட்ட உலோகத்தி னால் (Metal) செய்த கை வளையலை போடுவதும் ஆண்களுக்கு கூடாததும், பாவமுமாகும். அதேபோல்

- மதீனா முனவ்வரா زَادَهَا اللهُ شَرَفًا وَّتَعْظِيْمًا அல்லது அஜ்மீர் ஷரீஃபுடைய வெறுமனே வெள்ளி அல்லது ஏதாவது உலோகத்தினால் செய்யப்பட்ட மோதிரம் மேலும் இரும்பு மோதிரமும் கூடாது.

- மூலநோய் மற்றும் ஏனைய நோய்களுக்காக ஓதி ஊதிய வெறுமனே வெள்ளி அல்லது ஏதாவது உலோகத்தினால் செய்யப்பட்ட மோதிரமும் ஆண்க ளுக்கு கூடாது.

- யாராவது இஸ்லாமிய சகோதரர் உலோகத்தினால் செய்யப்பட்ட கைவளையல், மோதிரம், அனுமதிக்கப் படாத மோதிரம் அல்லது உலோக சங்கிலி (BRACELET-CHAIN) அணிந்திருந்தால், உடனே கழற்றி


www.dawateislami.net

விட்டு தௌபா செய்துக்கொள்ளுங்கள். மேலும் இனிமேல் அணியாமல் இருக்க உறுதி கொள்ளுங்கள்.

ஆயிரக்கணக்கான சுன்னாக்களை கற்பதற்கு மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட இரு நூற்களான “பஹாரெ ஷரீஅத்” 16ஆம் பாகம் (312 பக்கங்கள்) இன்னும் 120 பக்கங்கள் அடங்கிய “சுன்னதே ஓர் ஆDதாப்” ஆகிய நூற்களை வாங்கிப்படியுங்கள். தஃவதே இஸ்லாமியின் மதனி காஃபிலாக்களில் நாயகத்தின் ஆஷிகீன்களுடன் பயணித்தலும் சுன்னாக்களின் பயிற்சிக்கான சிறந்ததொரு வழியாகும்.

கருணையை அடைவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்
சுன்னாக்களை கற்பதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

கஷ்டங்கள் தீர்ந்துவிடும் காஃபிலாவில் பயணியுங்கள்
கெடுதிகள் நீங்குவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே, பயானை முடிக்கின்ற இந்நேரத்தில் சுன்னத்துக்களின் சிறப்புக்களை யும் மேலும் சில சுன்னத்துக்களையும், ஒழுக்கங்களையும் பயான் செய்யும் பாக்கியத்தை பெறுகிறேன். அகிலத்தின் அதிபதி அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள்


www.dawateislami.net

கூறினார்கள்: “யார் என் சுன்னாவை நேசிக்கின்றாரோ அவர் என்னை நேசிக்கின்றார், யார் என்னை நேசிக்கின் றாரோ அவர் சுவனத்தில் என்னோடு இருப்பார்.”

(இப்னி அசாகிர், பாகம் 7, பக்கம் 343)

எஜமானாரே! எனதுள்ளம் உங்கள்
சுன்னா வாழும் இல்லமாகட்டும்

சுவனத்தில் அயல்வீட்டாளனாக
தாங்கள் எனை ஆக்க வேண்டும்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰی عَلٰی مُحَمَّد

## “மிஸ்வாக் செய்வது முபாரகான சுன்னத்தாகும்” என்பதிலுள்ள இருபது எழுத்துகளின் தொடர்பில் மிஸ்வாகின் 20 மதனி முத்துக்கள்

ஆரம்பமாக அண்ணல்நபி صَلَّى اللّٰهُ تَعَالٰی عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் இரண்டு பொன்மொழிகள்:

- மிஸ்வாக் செய்து இரண்டு ரக்அத் தொழுவது, மிஸ்வாக் இல்லாமல் 70 ரக்ஆத் தொழுவதைவிட சிறந்தது. (அத்தர்கீப் வத்தர்ஹீப், பாகம் 1, பக்கம் 102, ஹதீஸ் 18)



www.dawateislami.net

❋ மிஸ்வாக் உபயோகிப்பதை தனக்கு அவசியமாக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில் அதில் வாயின் தூய்மை உள்ளதோடு, இறைவனின் திருப்பொருத்தத்திற்கு காரணமும் ஆகும். (முஸ்னத் இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல், பாகம் 2, பக்கம் 438, ஹதீஸ் 5869)

❋ தஃவதே இஸ்லாமியின் வெளியீட்டு நிறுவனமான மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட பஹாரெ ஷரீஅத் முதல் பாகம், 288ம் பக்கத்தில், ஸத்ருஷ் ஷரீஆ, பத்ருத் தரீகா, ஹழ்ரத் அல்லாமா மௌலானா முஃப்தி முஹம்மத் அம்ஜத் அலி அஃலமி عَلَیۡهِ رَحۡمَةُ اللهِ الۡقَوِی அவர்கள் எழுதுகிறார்கள். சங்கையான ஷெய்க்மார் கள் கூறுகிறார்கள்: எந்த மனிதர் மிஸ்வாக்கை வழக்கமாக்கிக் கொள்வாரோ, மரணத்தருவாயில் அவருக்கு கலிமாவை மொழிவதற்கான நற்பாக்கியம் கிடைக்கும். மேலும் யார் அBபின் சாப்பிடுகிறாரோ மரணத்தருவாயில் அவருக்கு கலிமாவை மொழியும் பாக்கியம் கிடைக்காது.

❋ ஹழ்ரத் ஸய்யிதுனா இப்னு அBப்பாஸ் رَضِیَ اللهُ تَعَالٰی عَنۡهُمَا அவர்கள் அறிவிக்கிறார்கள். மிஸ்வாக்கில் பத்து சிறப்புகள் உள்ளன. வாயை தூய்மைப்படுத்துகிறது, பல் ஈருகளை பலப்படுத்துகிறது, கண் பார்வையை அதிகரிக்கிறது, சளியை வெளியேற்றுகிறது, வாயின் துர்நாற்றத்தை நீக்குகிறது, சுன்னாவுக்கு ஒப்பாகிறது,


www.dawateislami.net

மலக்குமார்கள் மகிழ்ச்சியடைகிறார்கள், இறைவன் திருப்தியடைகிறான், நன்மையை அதிகரிக்கச் செய்கிறது மேலும் இரைப்பையை சீராக்குகிறது. (ஜம்உல் ஜவாமிஃ லிஸ்ஸுயூத்தி, பாகம் 5, பக்கம் 249, ஹதீஸ் 14867)

❋ ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துல் வஹ்ஹாப் ஷஹ்ரானி قُدِّسَ سِرُّهُ النُّوْرَانِي அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒரு தடவை ஹழ்ரத் அபூபக்ர் ஷிப்லி பக்தாதி عَلَيْهِ رَحْمَةُ اللّٰهِ الْهَادِي அவர்களுக்கு வுழு செய்யும்போது மிஸ்வாக் தேவைப்பட்டது, எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை. எனவே ஒரு தீனார் (ஒரு தங்க நாணயம்) கொடுத்து ஒரு மிஸ்வாக்கை வாங்கி பயன்படுத்தினார்கள். அப்போது சில மனிதர்கள், நீங்கள் மிக அதிகமாக செலவு செய்து விட்டீர்கள்! இவ்வளவு பெரிய தொகைக்கு எங்காவது மிஸ்வாக் வாங்குவார்களா? என கேட்டதற்கு, அவர்கள் பதிலளித்தார்கள், நிச்சயமாக இந்த உலகமும் அதன் அனைத்து வஸ்துக்களும் அல்லாஹ் عَزَّوَجَلَّ விடம் ஒரு கொசுவின் இறக்கைக்கு சமமான அளவுகூட தகுதி வாய்ந்தது கிடையாது. "கியாம நாளின்போது, நீ எனது நேசரின் சுன்னாவை (மிஸ்வாக்கை) ஏன் விட்டாய்? நான் உனக்கு வழங்கிய சொத்து, செல்வத்தின் யதார்த்தம் (என்னிடத்தில்) கொசுவின் இறக்கைக்கு சமமாக கூட இல்லை. அவ்வாறாயின், இந்த இழிவான செல்வத்தை, அந்த மாபெரும் சுன்னாவை (மிஸ்வாக்கை) பெற்றுக்


www.dawateislami.net

கொள்வதற்காக ஏன் செலவிடவில்லை? என்று அல்லாஹ் عَزَّوَجَلَّ என்னிடம் கேட்டால், நான் எவ்வாறு பதிலளிப்பேன்?'' (முலக்கஸ் அZஸ் லவாகிஹுல் அன்வார், பக்கம் 38)

- ஸய்யிதுனா இமாம் ஷாபிஈ عَلَيْهِ رَحْمَةُ اللهِ الْقَوِى அவர்கள் அறிவிக்கிறார்கள். நான்கு விடயங்கள் புத்தியை அதிகரிக்கச் செய்கிறது: வீண் பேச்சுக்களை விட்டும் தவிர்ந்திருப்பது, மிஸ்வாக் பாவிப்பது, நல்லவர்களுடன் சேர்ந்திருப்பது மேலும் தனது இல்மின் பிரகாரம் அமல் செய்வது. (ஹயாதுல் ஹயவான், பாகம் 2, பக்கம் 166)

- மிஸ்வாக், Zைதூன் அல்லது வேப்பமரம் அல்லது பீலு (அதாவது அதன் மிஸ்வாக் மஞ்சல் நிறமுடையதாக இருக்கும்) அல்லது இதுபோன்ற கசப்பான சுவையுடைய மரங்களாக இருக்க வேண்டும்.

- மிஸ்வாக்கின் அகலம் சின்ன விரலின் அளவு இருக்க வேண்டும்.

- மிஸ்வாக்கின் நீளம் ஒரு சாணைவிட அதிகமாக இருக்கக்கூடாது. இல்லையெனில் ஷைத்தான் அதில் அமர்ந்துக்கொள்வான்.

- மிஸ்வாக்கின் மேற்பகுதி (பற்களில் உபயோகிக்கும் பகுதி) மென்மையாக இருக்க வேண்டும். இல்லை


www.dawateislami.net

யெனில் அது பற்களுக்கும், பல் ஈருகளுக்குமிடையே இடைவெளி உருவாக காரணமாகி விடும்.

- மிஸ்வாக் புதிதாக (Fresh) இருப்பது மிகச்சிறந்தது. இல்லையெனில், ஒரு குவளை தண்ணீரில் ஊரவைத்து மென்மையாக்கிக் கொள்ளுங்கள்.

- அதன் மேற்பகுதி (பற்களில் உபயோகிக்கும் பகுதி) ஐ தினமும் வெட்டிக்கொள்வது நல்லது. ஏனெனில் அதில் கசப்புத் தன்மை இருக்கும் வரைதான் அது பயனுள்ளதாக இருக்கும்.

- பற்களை அகலத்தால் மிஸ்வாக் செய்யுங்கள்.

- எப்போது மிஸ்வாக் செய்தாலும் குறைந்தது மூன்று முறை செய்யுங்கள்.

- ஒவ்வொரு தடவையும் கழுவிக்கொள்ளுங்கள்.

- மிஸ்வாக்கை வலது கையால் இவ்வாறு பிடியுங்கள். அதாவது சிறு விரல் கீழாகவும், மத்தியிலுள்ள மூன்று விரல்கள் மேலாகவும் மேலும் பெருவிரல் தலை பக்கமும் இருக்க வேண்டும்.

- ஆரம்பமாக வலது பக்கத்தின் மேல் பற்களிலும், பின்பு இடது பக்கத்தின் மேல் பற்களிலும், பின்னர் வலது பக்கத்தின் கீழ் பற்களிலும் பின்பு இடது பக்கத்தின் கீழ் பற்களிலும் மிஸ்வாக் செய்யுங்கள்.



www.dawateislami.net

- உள்ளங்கையால் பற்றிப்பிடித்து மிஸ்வாக் செய்வதால் மூலநோய் ஏற்படும் அச்சமுள்ளது.

- மிஸ்வாக் வுழுவுக்கு முன் செய்கின்ற சுன்னத்தாகும். எனினும், ஒருவரின் வாயில் துர்வாடை வீசுமேயானால் மிஸ்வாக் செய்துக்கொள்வது சுன்னதே முஅக்கதா ஆகும். (மஅஹுூத் அZஸ் ஃபதாவா ரZஸவிய்யா, பாகம் 1, பக்கம் 623)

- மிஸ்வாக் பயன்படுத்த முடியாத நிலைக்கு வந்து விட்டால் அதை வீச வேண்டாம். ஏனெனில் அது சுன்னாவை நிறைவேற்றிய கருவியாகும். எந்த இடத்திலாவது கவனமாக வைத்து விடுங்கள் அல்லது புதைத்து விடுங்கள் அல்லது கல் போன்ற பாரமான பொருளுடன் கட்டி கடலில் போட்டு விடுங்கள்.

(மேலதிக விபரங்களுக்காக மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட பஹாரெ ஷரீஅத் முதலாம் பாகம், 294 – 295 வரையுள்ள பக்கங்களை வாசியுங்கள்)

ஆயிரக்கணக்கான சுன்னாக்களை கற்பதற்கு மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட இரு நூற்களான “பஹாரெ ஷரீஅத்” 16ஆம் பாகம் (312 பக்கங்கள்) இன்னும் 120 பக்கங்கள் அடங்கிய “சுன்னதே ஓர் ஆDதாப்” ஆகிய நூற்களை வாங்கிப்படியுங்கள். தஃவதே இஸ்லாமியின்


www.dawateislami.net

மதனி காஃபிலாக்களில் நாயகத்தின் ஆஷிகீன்களுடன் பயணித்தலும் சுன்னாக்களின் பயிற்சிக்கான சிறந்ததொரு வழியாகும்.

கருணையை அடைவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்
சுன்னாக்களை கற்பதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

கஷ்டங்கள் தீர்ந்துவிடும் காஃபிலாவில் பயணியுங்கள்
கெடுதிகள் நீங்குவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

صَلُّوْا عَلَى الْحَبِيْب　　صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே, பயானை முடிக்கின்ற இந்நேரத்தில் சுன்னத்துக்களின் சிறப்புக்களையும் மேலும் சில சுன்னத்துக்களையும், ஒழுக்கங்களையும் பயான் செய்யும் பாக்கியத்தை பெறுகிறேன். அகிலத்தின் அதிபதி அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: “யார் என் சுன்னாவை நேசிக்கின்றாரோ அவர் என்னை நேசிக்கின்றார், யார் என்னை நேசிக்கின் றாரோ அவர் சுவனத்தில் என்னோடு இருப்பார்.” (இப்னி அசாகிர், பாகம் 7, பக்கம் 343)

எஜமானாரே! எனதுள்ளம் உங்கள்
சுன்னா வாழும் இல்லமாகட்டும்


www.dawateislami.net

சுவனத்தில் அயல்வீட்டாளனாக
தாங்கள் எனை ஆக்க வேண்டும்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## “கப்ருகளைத் தரிசிப்பது சுன்னத்” என்பதிலுள்ள 16 எழுத்துகளின் தொடர்பில் கப்ரிஸ்தானுக்கு சமூகமளிப்பதன் 16 மதனி முத்துக்கள்

- கண்மணி நாயகம், ரசூலே அக்ரம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அறிவிக்கிறார்கள். நான் உங்களை கப்ருகளை தரிசிப்பதை விட்டும் தடுத்திருந்தேன். இப்போது நீங்கள் கப்ருகளை தரிசியுங்கள். ஏனெனில் இது உலகப்பற்றுதல் இல்லாமல் ஆகுவதற்கு காரணமாகவும் மேலும் மறுமையை நினைவூட்டுவதாகவும் உள்ளது. (இப்னு மாஜா, பாகம் 2, பக்கம் 252, ஹதீஸ் 1571)

- முஸ்லிம்களின் கப்ருகளை தரிசிப்பது சுன்னத்தாகவும் அவ்லியாக்கள் மற்றும் ஷுஹதாக்களின் رَحِمَهُمُ اللّٰهُ تَعَالٰى ஸியாரங்களுக்கு சமூகமளிப்பது பாக்கியத்துக்கு மேல் பாக்கியமாகவும் மேலும் அவர்களுக்கு ஈஸால் ஸவாப் செய்வது (நன்மையை சேர்ப்பிப்பது) மிக ஏற்றமான நற்கிரிகையுமாகும். (ஃபதாவா ரZஸவிய்யா முகர்ரஜா, பாகம் 9, பக்கம் 532)


www.dawateislami.net

❋ (வலிமார்களின் ஸியாரங்கள் அல்லது) எந்தவொரு முஸ்லிமுடைய கப்ரை தரிசிக்க செல்வதாக இருந்தாலும் முஸ்தஹப்பான (விரும்பத்தக்க) முறை இதுவாகும். அதாவது முதலில் தனது இடத்தில் (மக்ரூஹ் அல்லாத நேரத்தில்) இரண்டு ரக்அத் நஃபில் தொழ வேண்டும். ஒவ்வொரு ரக்அத்திலும் சூரதுல் ஃபாத்திஹா ஓதிய பின் ஒரு முறை ஆயதுல் குர்ஸியும், மூன்று முறை சூரதுல் இக்லாஸும் ஓதுவதோடு, அந்த தொழுகையின் நன்மையை கப்ரிலே உள்ளவருக்கு சேர்ப்பித்து விட வேண்டும். அல்லாஹுதஆலா அந்த மரணித்த நபருடைய கப்ரிலே ஒளியை உண்டாக்குகிறான். மேலும் இந்த (நன்மையை சேர்ப்பிக்கும்) மனிதனுக்கு மிக அதிகமான நன்மைகளை வழங்குகிறான். (ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 350)

❋ சங்கையான ஸியாரங்கள் அல்லது கப்ரை தரிசிக்கச் செல்லும் வழியில் வீண் பேச்சுக்களில் ஈடுபட வேண்டாம். (ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 350)

❋ கப்ருக்கு மரியாதைக்கான ஸஜ்தா செய்வது ஹராமாகும். மேலும் இபாதத்துடைய நோக்கம் இருந்தால் குஃப்ராகும். (மஅஹுத் அZஸ் ஃபதாவா ரZஸவிய்யா, பாகம் 22, பக்கம் 423)

❋ கப்ரிஸ்தானுக்கு செல்லும்போது, முன்னர் எப்போதுமே முஸ்லிம்களின் கப்ருகள் இருக்காத பொதுவான


www.dawateislami.net

வழியில் செல்லுங்கள். புதிதாக பாதை அமைக்கப் பட்டிருந்தால் அதன்மீது செல்லாதீர்கள்.

❋ “ரத்துல் முஹ்தாரில்” உள்ளது. (கப்ரிஸ்தானில் கப்ருகளை மறைத்து) புதிய பாதை அமைக்கப்பட்டிருந் தால் அதன் மீது நடப்பது ஹராமாகும். (ரத்துல் முஹ்தார், பாகம் 1, பக்கம் 612) மாறாக, அந்த புதிய பாதையின் மீது சந்தேகம் மாத்திரம் இருந்தாலும், அதன் மீது நடப்பது அனுமதிக்கப்படாததும், குற்றமு மாகும். (துர்ரே முக்தார், பாகம் 3, பக்கம் 183)

❋ அவ்லியாக்களின் பல தர்ஹாக்களில், தரிசிக்க வருவோரின் வசதிக்காக முஸ்லிம்களின் கப்ருகளை உடைத்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளதை பார்க்கிறோம். அத்தகைய தரையிலே ஒய்வெடுப்பது, நடப்பது, நிற்பது, குர்ஆன் ஓதுவதற்காக அல்லது திக்ர் வகைகளை செய்வதற்காக அமர்வது போன்றவைகள் ஹராமாகும். தூரமாக நின்றே ஃபாத்திஹா ஓதிக் கொள்ளுங்கள்.

❋ கப்ருகளை அதில் அடக்கப்பட்டிருப்போரின் முகத்துக்கு நேரே நின்று தரிசிக்க வேண்டும். அவரது பார்வை உங்கள் பக்கம் படும்படியாக அவருடைய காலடியின் பக்கமாக செல்ல வேண்டுமே தவிர, அவர் தலையெடுத்து பார்க்கும்படியாக அவரது தலைமாட்டு


www.dawateislami.net

பக்கமாக செல்லக்கூடாது. (ஃபதாவா ரZஸவிய்யா முகர்ரஜா, பாகம் 9, பக்கம் 532)

❋ கப்ரிஸ்தானில் இவ்வாறு நிற்க வேண்டும். அதாவது, உங்களின் முதுகு கிப்லாவை நோக்கியும், முகம் கப்ர் வாசிகளின் முகத்தை நோக்கியும் இருக்க வேண்டும். அதன்பின் இவ்வாறு கூற வேண்டும்.

اَلسَّلَامُ عَلَيْكُمْ يَا اَهْلَ الْقُبُوْرِ

يَغْفِرُ اللهُ لَنَا وَلَكُمْ اَنْتُمْ لَنَا سَلَفٌ وَنَحْنُ بِالْاَثَرِ

**பொருள்: கப்ர் வாசிகளே! உங்கள் மீது ஸலாம் உண்டவதாக, அல்லாஹ் عَزَّوَجَلَّ எங்களையும், உங்களையும் மன்னித்து விடுவானாக. நீங்கள் எங்களுக்கு முன்னால் வந்து விட்டீர்கள், இன்னும் நாம் உங்களுக்கு பின்னால் வர இருக்கின்றோம்.** (ஆலம்கீரி, பாகம் 5, பக்கம் 350)

❋ யார் கப்ரிஸ்தானில் நுழைந்து இவ்வாறு கூறுகிறாரோ,

اَللّٰهُمَّ رَبَّ الْاَجْسَادِ الْبَالِيَةِ وَالْعِظَامِ النَّخِرَةِ الَّتِىْ خَرَجَتْ مِنَ الدُّنْيَا وَهِىَ

بِكَ مُؤْمِنَةٌ اَدْخِلْ عَلَيْهَا رُوْحًا مِّنْ عِنْدِكَ وَسَلَامًا مِّنِّىْ

**(பொருள்: யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! வெந்து போகும் உடல் மற்றும் சிதைந்து போகும் எழும்புகளின் இறைவனே! உலகத்திலிருந்து ஈமானுடைய நிலையில் எவர்கள்**



www.dawateislami.net

**விடைபெற்று சென்றார்களோ அவர்களின் மீது உனது அருளையும் எனது ஸலாமையும் சேர்ப்பித்து விடுவாயாக!)**

அவருக்காக ஹழ்ரத் ஸய்யிதுனா ஆதம் عَلٰی نَبِیِّنَا وَعَلَیۡهِ الصَّلٰوةُ وَالسَّلَام அவர்கள் முதல் இதுவரை எத்தனை முஃமின்கள் மரணித்துள்ளனரோ அவர்கள் அனைவரும் பாவமன்னிப்புக்காக துஆ இறைஞ்சுவார்கள். (முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா, பாகம் 8, பக்கம் 257)

- பாவிகளுக்கு பரிந்துரை செய்பவர்களான பெருமானார் صَلَّی اللّٰه تَعَالٰی عَلَیۡهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அறிவித்துள்ளார்கள். எந்த மனிதர் கப்ரிஸ்தானில் நுழைந்து, ஸூரதுல் பாத்திஹா, ஸூரதுல் இக்லாஸ் மற்றும் ஸூரதுத் தகாஸுர் ஓதி, பின்பு, யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! நான் ஓதிய இந்த குர்ஆன் வசனங்களின் நன்மைகளை இந்த கப்ரிஸ்தானிலுள்ள முஃமினான ஆண்கள் பெண்களுக்கு சேர்ப்பித்து விடுவாயாக! என்று துஆ கேட்கின்றாரோ, அவருக்காக அந்த அனைத்து முஃமின்களும் கியாம நாளன்று பரிந்துரை செய்வார்கள். (ஷர்ஹுஸ் ஸுதூர், பக்கம் 311)

- பரிசுத்த ஹதீஸில் வருகிறது. “யாராவது 11 தடவைகள் ஸூரதுல் இக்லாஸை அதாவது قُلۡ هُوَ اللّٰهُ اَحَدٌ முழுமையாக ஓதி, அதன் நன்மையை மரணித்தவர்


www.dawateislami.net

களுக்கு அனுப்பி வைத்தால், அவருக்கு (ஓதி அனுப்பியவருக்கு) மரணித்தவர்களின் எண்ணிக் கைக்கு சமமாக நன்மைகள் கிடைக்கும்.” (துர்ரே முக்தார், பாகம் 3, பக்கம் 183)

- கப்ரின் மேலே ஊதுபத்தியை எரிக்காதீர்கள். அது அவமரியாதையும், மோஷமான செயலுமாகும். (மேலும் அதனால் மரணித்தவருக்கு கஷ்டம் ஏற்படுகிறது) ஆம் அங்கே (சமூகமளித்திருப்போருக்கு) நறுமணம் (சேர்ப்பிக்கும்) நாட்டமாக இருந்து கப்ரின் பக்கத்தில் வெற்றிடம் இருந்தால் அதை அங்கே வைக்கலாம். ஏனெனில் நறுமணத்தை சேர்ப்பிப்பது விரும்பத்தக்க விடயமாகும். (முலக்கஸ் அZஸ் ஃபதாவா ரZஸவிய்யா முகர்ரஜா, பாகம் 9, பக்கம் 482, 525)

- அஃலா ஹழ்ரத் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் இன்னுமொரு இடத்தில் குறிப்பிடுகிறார்கள். ஸஹீஹ் முஸ்லிம் ஷரீஃபில் ஹழ்ரத் அம்ர் பின் ஆஸ் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மரணிக்கும்போது தனது மகனிடம் கூறினார்கள். “நான் மரணித்து விட்டால் என்னுடன் ஒப்பாரி வைக்கின்ற பெண்களோ, நெருப்போ செல்லக் கூடாது” (முஸ்லிம், பக்கம் 75, ஹதீஸ் 192)

- கப்ரின் மீது விளக்கு அல்லது மெழுகுவத்தி போன்றவற்றை வைக்கக்கூடாது, ஏனெனில் அது நெருப்பாகும். மேலும் கப்ரின் மீது நெருப்பை



www.dawateislami.net

வைப்பதால் மரணித்தவருக்கு துயரம் ஏற்படுகிறது. ஆம் இரவிலே வழியில் நடப்போருக்கு வெளிச்சம் ஏற்படுத்தும் நோக்கம் இருந்தால் கப்ரின் ஒரு பக்கமாக காலியான இடத்தில் மெழுகுவத்தி அல்லது விளக்கை வைக்கலாம்.

ஆயிரக்கணக்கான சுன்னாக்களை கற்பதற்கு மக்தBபதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட இரு நூற்களான "பஹாரெ ஷரீஅத்" 16ஆம் பாகம் (312 பக்கங்கள்) இன்னும் 120 பக்கங்கள் அடங்கிய "சுன்னதே ஓர் ஆDதாப்" ஆகிய நூற்களை வாங்கிப்படியுங்கள். தஃவதே இஸ்லாமியின் மதனி காஃபிலாக்களில் நாயகத்தின் ஆஷிகீன்களுடன் பயணித்தலும் சுன்னாக்களின் பயிற்சிக்கான சிறந்ததொரு வழியாகும்.

கருணையை அடைவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்
சுன்னாக்களை கற்பதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

கஷ்டங்கள் தீர்ந்துவிடும் காஃபிலாவில் பயணியுங்கள்
கெடுதிகள் நீங்குவதற்கு காஃபிலாவில் பயணியுங்கள்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே, பயானை முடிக்கின்ற இந்நேரத்தில் சுன்னத்துக்களின் சிறப்புக்களை யும் மேலும் சில சுன்னத்துக்களையும், ஒழுக்கங்களையும்


www.dawateislami.net

பயான் செய்யும் பாக்கியத்தை பெறுகிறேன். அகிலத்தின் அதிபதி அண்ணல் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: “யார் என் சுன்னாவை நேசிக்கின்றாரோ அவர் என்னை நேசிக்கின்றார், யார் என்னை நேசிக்கின் றாரோ அவர் சுவனத்தில் என்னோடு இருப்பார்.”

(இப்னி அசாகிர், பாகம் 7, பக்கம் 343)

எஜமானாரே! எனதுள்ளம் உங்கள்
சுன்னா வாழும் இல்லமாகட்டும்

சுவனத்தில் அயல்வீட்டாளனாக
தாங்கள் எனை ஆக்க வேண்டும்

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد


www.dawateislami.net